REGISTERED No. M. 6165. அணா. 2

338/1-54

338

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

9 FEB 1954

பிப்ரவரி 1954.

| விஷயம். | பக்கம். |
|---|---|
| நமது நேரிய வழிகள் (மௌல்வி. எஸ். எம். ஹுஸைன் முஹம்மது, பாகவி.) | 1 |
| வேற்றுமை ஒழிய வேண்டும் (மாஸ்டர் கமால் பாபு) | 17 |
| மாயமாய் மறைந்த மங்கை (தொடர் கதை) | 24 |
| மதியுற்ற மாந்தர்களே (எச். எம். இஸ்மாயீல்) | 32 |

இஸ்லாம் ஆபீஸ் :
...s. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

JL
Q7ஸ்211,N2;F1
N54
187027

# பத்ஹுறூல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 1–8–0 |
| தனிப் பிரதி | அணா. | 2 |
| மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா | ரூ. | 2–0–0 |

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுறூல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

---


## தன்பீஹுறூல் அனும் பீ துஹ்பத்
## துல் அவாம்.

இதில் அல்லாஹ் றஸூலுடைய ஏவல்களும் ஆனந்தம் ரிவாயத்து ஹிக்காயத்துகளும், மிதால்களும் உலகம் ஆகிறத் துக்கு வேண்டிய நல்லுபதேசங்களை படிப்பவர் கேட்பவர்கள் மனதில் ஆகிரத்தின் விருப்பமூட்டும் வண்ணமாக 21 வித மான இனிய இராகங்களால் பாடப் பட்டிருக்கின்றன, சுமார் 240-பக்கங்களில் 40-பயான்களாக பொதிந்த நூல்.

ஆப்பைண்டு விலை ரூ. 1—9—0

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி M. A. ஷாஹுறூல் ஹமீது & ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# பத்ஹுல் இஸ்லாம்.

பிப்ரவரி—1954.


பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# நமது நேரிய வழிகள்


மௌல்வி. எஸ். எம். ஹுஸைன் முஹம்மது, பாகவி.


ஆத்மார்த்திகம், இறைவன் பால் விசுவாசம், அல்லாவிற்கு வழிபடல், அவனுக்காகவே வாழ்வது, வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் அவனையே லட்சியமாய் கருதுதல், நமக்கென ஒரு தனி நாகரீகம் நமக்கென ஒரு தனி அரசியல் நமக்கென ஒரு தனிப் பொருளாதார நியதி, பரவாழ்க்கை, நரக சுவர்க்க வாழ்க்கை, நன்மை செய்பவன் நன்மையை அடைகிறான், தீமை செய்பவன் தீமை யடைகிறான் என்பன போன்ற உயர்ந்த மறுஉலக நம்பிக்கை, யாவையும் நம்பி செயலுருவில் செய்வதும், நல்வாழ் வெய்தி ஆண்டவனின் நம்பிக்கை ஜீவியத்திலும் ஜீவியத்தின் இறுதியிலும் இடைபிரியாது இருந்து இவ்வுலகைப் பிரிந்து மோக்ஷ நிலை யடைவதே நமது லக்ஷியங்கள்.

## ஆத்மார்த்திகம் :—

இவ்வுலக வாழ்வை சிறப்புடன் பயன்படுத்தி இகவாழ்வை அபிவிருத்தி செய்து வாழ்வதே மனிதனுக்கு மிக தேவை. ஊண் உடை தேவைகளை பூர்த்தி செய்து வாழ்வதே பிரதானம். இதற்காக தொழில் வியாபாரம் போன்ற சாதனங்களே மிகத் தேவையென ஒரு சிலர் எண்ணுகின்றனர். ஆத்மீகம் தேவையில்லை யெனவும் வாதிக்கின்றனர். ஆத்மீக அறிவு ஆத்மீக வளர்ச்சிகளையே பிரமாதமாக மதித்து இக வாழ்வை அநித்யம் எனக்கருதி இகவாழ்வு தேவை யில்லையென ஆத்மீகமே சிறந்ததென வாதிக்கின்றனர் மற்றொரு சிலர், சந்நியாசமே மேலெனவும் வாதிக்கின்றனர்.

நாம் சொல்வது :—ஆத்மீக நலனை விரும்புவது போலவே தேக நலனையும் தேக நலனை வேண்டுவது போலவே ஆத்மீக நலனையும் கண்டிப்பாய் பிணைத்து இஸ்லாம் விரும்புகிறது. இதைத் தனித் தனியாக பிரித்து செல்வதே இஸ்லாத்திற்கு முற்றிலும் முரண். தேக நலன்களைக் கவனித்து இகவாழ்வையே பிரமாதப் படுத்தி ஆத்மீக, பர, வாழ்க்கையில் சிந்தனை செலுத்தாதவர்களே ஆண்டவனின் விரோதிக ளாயினர். ஆத்மீகமே சிறந்ததென மதித்து தேக நலன் தேக சாதனம் இகவாழ்வை விட்டவர்கள் சந்நியாசிகளென பெயர் சூடி இக வாழ்வை விட்டனர். இகவாழ்வின் சிறப்புகளைப் பெற்றார்களில்லை வேறொரு சிலர். இஸ்லாம் தேக வாழ்க்கை, ஆத்மீக வாழ்க்கை இரண் டையும் ஒருங்கே யமைத்து மாந்தரை நடத்திச் செல்கிறது.

கல்பு, நப்ஸு ரூஹ், அக்ல், இன்ஸான், யாவும் ஒரே அருத்தமாய் அரபியில் வழங்கப்படுகின்றன. இப்பொருளையே ஆத்மா எனக்கூறலாம். இவைகள் மனிதன் என்ற அருத்தம் பெற்றவைகளா யிருக்கின்றன. இன்ஸான் என்பது யாதெனச் சிந்திப்போம். மனிதனைக் கூருபோட்டு பிரித்தால் கை, கால், கண், மூக்கு, செவி, தலை, இடுப்பு எனபல கூருக ளாய் பிரிக்கலாம். இவைகளை பிரிக்குங்கால் கை, கால், கண் என்றே கூறுகின்றோம். இவைகளை இன்ஸான் என்று கூறுவதில்லை. அப்படி யானால் மனிதனில் பிறந்த காலம் தொட்டு இறக்கும் வரை எவ்வித மாறுதலு மில்லாத ஒரு தனி வஸ்து இருக்கிறதல்லவா. அதற்கு நிறம் பேதாபேதம், நீளம், ஆழம், அகலம், ரூபம், வளர்ச்சி, உயரம், கட்டை என்பன போன்ற தன்மைக ளெதுவுமில்லை. இதை தான் ரூஹ், நப்ஸ், கல்பு, அக்ல், எனக் கூறுவோம். இது தான் இன்ஸான், இது தான் மனிதன் எனப்படும்.

இந்த இன்ஸான் என்பதை இறைவன் இத்தேகத்தில் அமைத்து சேர்த்து இருக்கிறான். இக்கூட்டில் தாவர சக்தி, மிருக சக்தி, ஆத்மா என மூன்று சக்திகளை அல்லாஹ் அமைத்திருக்கிறான். வளரும் சக்தியே தாவரசக்தி. உண்ணல், குடித்தல், நுகர்ச்சி, ஆடல், அசைதல், நிரசைவு, தூக்கம், பலஹீனம், சந்தான விருத்தி யாவையும் மிருக சுபாவமாய் அமைத்திருக்கிறான். பேராசை மேலெண்ணம் பெருமை, ஆணவம், பொறாமை, கோபம் யாவும் நப்ஸானியத், ஷைதானிய்யத் என்ற தன்மைகளாகும். அறிவு பரோபகாரம், சாந்தம், பணிவு, இரக்கம் செய்நம்பிக்கை, தெய்வ வழிபாடு, நற்குணம், அவாஇன்மை, போன்ற சற்குணங்களே ரூஹ்விற்குரிய அம்சங்களாகும். இது தான் மனிதாம் சங்கள்.

விஞ்ஞானிகளாவதும் போற்றுவதும் அதிபதி அமைச்சனுவ தும் உலகை ஆட்டுவதும், விண்ணில் பறப்பதும், ஆழிய கடலில் மூழ்குவதும் சர்வ சிருஷ்டிகள் இயற்கைகளைக் கண்டு பிடிப்பதும்

18027

அவ்லியாக்களாகுவதும், நபிமார்கள் நபிமார்களாகியதும் சர்வமும், இந்த ரூஹ், இன்ஸான் என்பதனாலேயே, வேறன்று. இந்த இன்ஸான் என்ற சக்தியினாலேயே நபிமார்களும் வேதங்களும் இறைவனால் நம்மவர் கட்கு அனுப்பப்பட்டன. இன்று ஒருவன் அவன் நற்செயல்களால் புகழப்படுவதென்றால் இந்த இன்ஸான் என்ற ஆத்மீகத் தன்மையால் தான். அவன் தீயத்தன்மைகளால் இகழப்படுவதென்றாலும் இந்த ஆத்மீக தீயசுபாவத்தால் தான் இந்த கூட்டினாலல்ல.

இக்கூடு ஆன்மாவிற்கு தங்குமிடம். இந்த ஆன்மாவை காப்பாற்றுவதென்றால் இக்கூடு விழாமலிருக்க வேண்டும். ஆகவே இக்கூட்டையும் காப்பாற்ற வேண்டும். இதற்காகவே இவ்வகில உலகையும் இறைவன் சிருஷ்டித்தான்; இதைக் காப்பாற்றுவதற்கு ஹலால் ஹராமான உணவுகளை பகுத்து பார்க்கவும் நல்ல தொழில் தீய தொழில் என்று கவனித்துப் பார்க்கவும் பல கடமைகளுக்குள்ளானான் இந்த மனிதன். ஆகவே, தேகமில்லாது ஆன்மா வாழ முடியாது. ஆன்மா சிர்பெறாவிடில் இக்கூடு நன்கு வாழ முடியாது. ஆன்மாவையும் இக் கூட்டையும் இரண்டையும் கவனிப்பது கடமை. இது தான் இஸ்லாத்தின் போதனை.

இவ்வுலகமும் இவ்வுலகிலுள்ள ஒவ்வொன்றும் இக்கூடு வாழ சாதனங்களாயிருக்கின்றன. இச்சாதனங்களைப் பயன்படுத்துவதற்காகவே தொழில் வர்த்தகம், விவசாயம், விஞ்ஞான சாதனங்கள் யாவும் வேண்டப்படுகின்றன. இச்சாதனங்களில்லாவிடில் தேகம் வாழ முடியாது. இது போலவே ஆத்மா வாழ வேண்டுமென்றால் ஆத்மாவிற்கு உணவு அல்லாவின் நம்பிக்கை. அவனது பக்திபயம், நற்குணம் மார்க்க அறிவுகள் சத்திய நெறியாவும் வேண்டற்பாலனவே. இதைச் சுட்டியே அல்லாஹு தஆலா, "வானம் பூமி மலை யாவிற்கும் நமது அமானிதத்தை (ஈமானை) எடுத்து காட்டினோம். அவைகள் சுமக்க இயல வில்லை. ஆனால் மனிதன் அதைச் சுமந்தான். எனினும் மனிதன் அறியாதவனாகவும் அநீதியாளனாகவுமாகி விட்டான்" தனது திருமுறையில் கூறுகிறான்.

இந்த ஆன்மா (ரூஹ்) வை இறைவன் இக்கூட்டில் ஒரு அரசனாக அமைத்து இக்கூட்டையும் அதன் ஒவ்வொரு அங்கத்தையும் ஊழியர்களாகவும் அமைத்திருக்கிறான். இது கையைப் பிடியென்று ஏவினால் கை பிடிக்கிறது. வாயைப் பேசு என்று ஏவினால் வாய் பேசுகிறது. இந்த ஆன்மா பரிசுத்தமடைந்து இந்த தேகத்தை நல்வழியில் ஏவி நற்காரியம் செய்தால் இந்த ஆன்மாவும் தேகமும் நற்கதி நல்கி நன்மையடைகின்றன. இந்த ஆன்மா சதா நப்ஸானியத், ஷைத்தானியத், ஹைவானிய்யத் என்ற அவா, ஷைத்தான், மிருகம் என்ற மூன்று சக்திகளிடை போரிட்டுக் கொண்டு வெற்றிக் கண்டாலல்லாது இந்த

ஆன்மா பரிசுத்தமடைந்து மோக்ஷ நிலையைக் காண முடியாது. இவ்விதப் போரையே சுட்டி இன்றுவரை சிறிய போர்கள் செய்தோம். இனிமேல் பெரும் போர் செய்ய திரும்பிவிட்டோம் என நபிகள் (ஸல்) அவர்கள் கூறினர். இவ்விதம் இச்சக்திகளுடன் போரிட்டு வெற்றி கண்ட மகான்களையே இறைவன் தனது குர்ஆனில் ஜெயசீலர்கள், மூமீன்கள், பக்தர்கள், பயந்தவர்கள், உள்ளச்சத்தார்கள், பொருமையாளர்கள், ஸாலிஹீன்கள், உண்மையாளர்கள், தியாகிகள் எனப் போற்றிப் புகழ்கிருன். மிருக சுபாவங்கள், ஷைத்தானின் குணங்கள் நப்ஸானியத்துகளில் மாட்டி மடியும் விரோதிகளையே காபிரீன்கள், முனுபிகின்கள், ஷைத்தானின் தோழர்கள் எனவும் நரகவாதிகள், அவர்கள் கண்களில் மூடியுள்ளன, காதுகளில் அடைப்பிருக்கின்றன, அவர்கள் ஹிருதயங்களில் முத்திரை யிடப்பட்டன, ஆடு மாடுகளைப் பார்க்கினும் கெட்டவர்கள் எனப் பலவாராய் இகழ்ந்து கூறுகிருன்.

இற்றைகாலம் அறிவு வளர்ச்சியில் மிதம் மிஞ்சி விட்டன என பிரேமை கொள்கின்றனர். மக்கள் விஞ்ஞானம் மேலோங்கிவிட்டது, அரசியல் ஞானம் பொங்கி விட்டது, அரசியல்கலைக்கோரளவில்லை என்கின்றனர், ஒரு சிலர். ரஸாயனம், கணிதம், வர்த்தகம், தொழில் நுட்பம், நாகரீகம் யாவும் மேலோங்கி விட்டன. தேசாஸ்திரம், பௌதீக சாஸ்திரம் யாவற்றிலும் முன்னேறிச் செல்கின்றனர். இவைகளுண்மையே. இவைகள் மாந்தர்கட்கு வேண்டியது போலவே ஆத்மீகம் வேண்டுமல்லவா? இந்த ஆத்மிர்த அறிவு இருந்தாலல்லாது மனித சமுதாயம் இகத்திலும் பரத்திலும் நல் வாழ்வு நடத்த முடியுமா? இக்கலைகளினுல் வயிறு வளர்க்கலாம், உடுத்தலாம், பணம் சேமிக்கலாம், பங்களாக்களை கட்டலாம், விண்ணிலே பறக்கலாம், நாடு பிடிக்கலாம், அரசபுரியலாம், மனித சமுதாயத்தைக் காப்பாற்ற முடியுமா? ஏழைகளை ஆதரிக்க முடியுமா? தெய்வீக பக்தி ஏற்படுமா? சமாதானம் நிலவுமா? ஆசை ஒழியுமா? அமைதி வாழ்க்கை ஈகை குணங்கள் உண்டாகுமா? பஞ்சமா பாதகக் குணங்கள் மறையுமா? இவ்வித சத்போதனைகளும் சற்குணங்களும் ஏற்படுவதென்ருல் ஆத்மார்த்த அறிவினுல்தான் ஏற்படும். கோடிக் கணக்கான மக்களிருக்கின்றனர், இன்று அறிவாளிகளுக்கோ அளவில்லை, பணக்காரர்களுக்கோ குறைவில்லை, இவ்வித லக்ஷயங்கள் எங்கிருக்கின்றன. வார்த்தைகள் கட்சி வாதங்கள் தவிர என்ன இருக்கிறது? முஹம்மதுர் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களது வாழ்க்கை என்ன? சாதனைகள் என்ன? சாதித்த காலம் என்ன? சாதித்த காலம் 23 ஆண்டு தான். சுப்ஹானல்லா! ஒப்பற்ற போதனை, யாரும் செய்ய முடியாத செய்கை, ஆதமார்க்க அறிவுகளைத் தவிர்த்து மனித சமுதாயம் வெற்றி காண முடியாது. பிரசங்கிகள் பேசுகின்றனர் பயனில்லை. எழுத்தாளர்கள்

தீட்டுகின்றனர் நன்மையில்லை. சமாதானம் வேண்டு மென்கின்றனர் கிடைப்பதில்லை. அறிவாளர்கள் வளர்கின்றனர் அறிவு ஒழிகின்றது. பெரியார்களுக்கில்லை மகத்துவம். தந்தை தாயிக்கில்லை பிள்ளைகளின் நன்றி. சன்மார்க்கம் பிசகெனக் காண்கின்றனர் அறிவிருந்து மில்லார். இதெல்லாம் ஆத்மீக சத்திய அறிவு இல்லாததே காரணம்.

இந்த ஹிருதயம் ஒரு அபார சக்தியுள்ளது. இதற்கு இரண்டு வாயல்களுண்டும். அகவாயல், புரவாயல்களே அவ்விரண்டும். கண், செவி, நாவு, மூக்கு, தொட்டறிவு இவ்வைந்தும் புரவாயல் சம்பந்தப் பட்டவைகள். இவ்வைந்தும் தேகத்தை காப்பனவா யிருப்பது போலவே ஹிருதயத்தையும் கார்க்கின்றன. இதனாலேயே வாயினால் புரம், கோள், பொய், திட்டல், சாபம் யாவையும் செய்யக் கூடா தென வும், செவி, கண்களால் ஹராமான கேள்வி பார்வைகளை பார்க்க லாகா தெனவும் மூக்கு இதர அங்கங்களினால் ஹராமான விஷயங்களை செய்த லாகாதெனவும் மார்க்கம் போதிக்கின்றது. ஏன் இவ்வாயல்கள் கெட்டு விட்டால் ஹிருதயம் மரித்து விடுகிறது, "ஒருவன் ஒரு பாவம் செய் தால் அவன் ஹிருதயத்தில் கருப்புப் புள்ளி யொன்று விழுகிறது. அவன் பாப மன்னிப்புக் கோரி இறைவனிடத்தில் மன்னிப்பு பெற்றால் அப்புள்ளி அழிந்துவிடும். அப்படியின்றி மென்மேலும் பாபம் புரிந்து வந்தால் அப்புள்ளி படர்ந்து அவன் ஹிருதயத்தை மூடி விடுகிறது ஆண்டவனை மறந்து விடுமளவும்" என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறி இதைச் சுட்டிக்காட்டி யிருக்கின்றனர்.

இதுபோலவே அகவழியை காப்பாற்ற வேண்டுமானால், கோபம் பெருமை, தன்னலம், ஆசை மேலெண்ணம், கர்வம் இல்லாது ஒழிக்க வேண்டும். இதனால் மனதைப் பழக்கும் படிப்பும் வேண்டும். இந்த மாதிரி அகமும் புரமும் பாவங்களை யகற்றி பரிசுத்தமடைந்தால் இந்த ஹிருதயத்தால் விண், மண், மத்தியிலுள்ள மோக்ஷங்களைக் காணலாம். அர்ஷு, குர்ஸு நரகம், சுவர்க்கம், யாவையும் பார்க்க முடியும். இந்த ஹிருதயம் அபார சக்தியுடையது. "நான் பார்ப்பவைகளை நீங்கள் பார்த்தால் அதிகம் அழுவீர்கள். குறைவாகச் சிரிப்பீர்கள்" என நபிகள் நாயகம் கூறியதும் நரகை, சுவர்க்கத்தை எனக்குக் காட்டப்பட்டது அநேக அற்புதங்களைப் பார்த்தேன், என அவர்கள் கூறியது இந்த ஹிருதயத்தின் அபார சக்தியேதான். "உன்னை ஒருசிறு கூடென மதிக் கிறாய்; உன்னில் ஒருபெரும் உலகம் இருப்பதை அறி" என அலி(றலி) அவர்கள் கூறியதும் இந்த அபார சக்தியே காரணம். "ஒரு அறிவாளி இறந்தால் உலகம் மரித்து விட்டது" என நபிகள் நாயகம் கூறியதும் இந்த அபார சக்தியினாலே தான். உண்மை விசுவாசிகளி (மூமீன் களி) ன் ஹிருதயம் அல்லாஹ் (ஜல்) வின் அமரும் ஆசனம், என்ற நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஹதீஸும் இந்த அபார சக்திக்

காகவே. இவைகள் எம் ஆத்மார்த்த லக்ஷியங்களும் சித்தாந்தமு மாகும்.

## ஈமான்.

"சிருஷ்டிப்பொருள்கள் தன்தானே இயங்குகின்றன. இவைகள் தோன்றுவதற்கு தோற்றுவிப்போன் தேவையில்லை. இதுபோலவே இவைகளை காப்பதற்கும் அளிப்பதற்கும் ஒரு கடவுள் தேவையில்லை. தாமே ஆகி தாமே அழிகின்றன. சிருஷ்டிகளுக்கு சிருஷ்டிப்பவனளவில் துவர்க்கம் முடிவு எதிலும் சம்பந்தமில்லை." (ஒரு சாரார்)

மனித சமுதாயம் தன் காரியங்களைத் தானே பார்த்துக் கொள்ள லாம், தன்னைத்தானே சீர்திருத்திக் கொள்ளலாம் வழிகாட்டிகள், தேவையில்லை. (வேறு ஒருவர்)

மதம் தனத்தனி நபருக்குள்ள விஷயம்; ஒரு ஜனசாராருக்கு, ஒரு கூட்டத்தினருக்கு என்ற முறையில் மதம் பிரதானமல்ல. மனித சமுதாயத்திற்கு பிற்கால் (கியாம) வாழ்க்கையில்லை. மனிதன் வாழ்க் கை இவ்வுலகத்துடன் முடிவுற்றுவிடுகிறது. (இது ஒரு சாரானின்வழி)

நமது வழியும் நிர்ணயமும் :—இவைகள்யாவும் நம்மிடம் தவறான வைகள். இச்சிருஷ்டிகள் தம்தாமாக இயங்க முடியாது. கட்டாயம் சிருஷ்டிப்பவன் தேவையே. இகவாழ்விற்கு எவ்வளவு தேவையோ சிருஷ்டிகளுக்கு மறுஉலக வாழ்விலும் அல்லாஹ்வாகிய சிருஷ்டிக் கருத்தா அளவில் அவ்வளவு தேவையிருக்கிறது. இச்சிருஷ்டிகள் சிருஷ் டிக்கருத்தாவின் சிருஷ்டிகளா யிருப்பதுபோல் இச்சிருஷ்டிக்கருத் தாவின் ஆட்சிக்கும் அடிமைப்பட்டனவா யிருக்கின்றன. சர்வமும் அவனது ஆளுகைக்கு உட்பட்டனவே. ஈதென்ன? மறுஉலகிலும் (கியாமத்திலும்) அவன் ஆட்சிக்கும் ஆளுகைக்கும் கட்டுபட்டனவே தான். உற்பத்திக்கு ஒருவன் வேண்டும் அல்லவா அவனிடமே சிருஷ் டிகளை காப்பதும் அழிப்பதும் இருக்கின்றன. இம்மூன்று லட்சணங் களும் ஒரே சர்வகர்த்தனாகிய அல்லாவிடமே உள்ளன. மனித சமுகத் தினர் எவ்வளவு அறிவுபெற்றாலும் எவ்வளவு பலம் பெற்றாலும் தம்மை தாமே சீர்திருத்திக் கொள்ளவியலாது. சில தேவதூதர்களாகிய நபி கார்களின் வழிகாட்டன்றி மனித சமுதாயம் இகவாழ்விலோ பரவாழ் விலோ வெற்றி காணவியலாது. இதுவென்ன. மனித வாழ்க்கை கடவுளைவிட்டோ மார்க்கத்தைவிட்டு பிரிந்திருக்கவும் முடியாது. இவ் வுலக வாழ்க்கையின் மனிதவர்க்கம் இன்பசுகங்களை அடைவதுபோல் கியாம நாளிலும் நரகவாழ்வையோ சுவர்க்க வாழ்வையோ நிச்சயம் அடையத்தான் வேண்டும். இவைகள் எங்களது நிர்ணயமும் லக்ஷயங் களாகும்.

## சட்டங்களும் நீதிகளும்.

மனித நலன்களுக்காக சட்டங்களோ நியதிகளோ வேண்டியதில்லை. பணமே லக்ஷியம் சுகபோக வாழ்க்கைகளே வேண்டற்பாலவை. இவைகளை சம்பாதிப்பதற்கு ஒருதர்ம நியதியோ வரம்போ வேண்டியதில்லை, என்கின்றனர் ஒரு சாரார்.

குர்ஆனின் சட்டங்கள் ஹதீஸ்கள், மனித முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கின்றன. நடனமாடல், சங்கீதம்பாடல், கூத்தாடல், அலங்கரித்தல் அதிக வீண்செலவு, ஆடம்பர வாழ்க்கையைச் செய்தல் யாவும் மாந்தருக்கு இன்றியமையாதவை, என்பதே ஒரு சாரார் நினைப்பு.

ஆண்கள் பட்டாடையணிதல், தங்க வெள்ளி நகைகளை யணிதல் முடிவெட்டி அலங்கரித்தல், தங்க சங்கிலி, மோதிரம் அணிதல் யாவும் கூடாதவைகளே, எனினும் தங்கள் லட்சியங்களாக இவைகளைக் கருதுகின்றனர் ஒரு சிலர்.

நமது சட்ட நியதிகள்:—நான்கு வகைப்படும். ஆண்டவனுக்கும் மக்களுக்கும் சம்மந்தப்பட்டவை (1) மக்களுக்குள் நடைபெறும் சம்மந்தகள் (2) நீதிவிசாரணை (3) தண்டனை விதித்தல் (4) இந்நான்குமே அவை. இதேபோல் நமது சட்டங்கள் ஹிருதயம் சம்மந்தப்பட்டவை அங்கங்கள் சம்மந்தப்பட்டவை என இருவகைப்படும்.

ஹிருதய சம்மந்தப்பட்டவை அங்க சம்மந்தப்பட்டவை இரண்டிலும் செய்யவேண்டிய கடமைகள் செய்யக்கூடாத காரியங்களென இருவகைப்படும்.

ஹிருதய சம்மந்தமான கடமைகள்:—அல்லாஹ் ஒருவன், ஒப்புவமையில்லாதவன், ஆக்குவோன், காப்போன், அழிப்போன் அவனே, சதாஜீவியன், அழிவில்லான், எக்குறையுமில்லான், சத்தியம் நீதிகளை விரும்புவதுபோல் ஏவுபவன் தீயபாவங்களை வெறுப்பவன், பார்வை, கேள்வி, நாட்டம், பேச்சுஜீவன், சக்தி, அறிவுயாவையும் உள்ளவன்.

மலக்குகள் என்ற தனிப்படைப்பு ஒன்றுண்டு, அவர்கள் பாவமற்றவர்கள், ஊண்தீன் போகம் யாவுமில்லாதவர்கள், இறைவனின் உயர்ந்த பக்த்தர்கள்.

வேதங்கள்: ஆண்டவனின் போதனைகள், அவனது பேச்சுகள், மலக்குகளால் வஹ்யாக நபிமார்களுக்கு கொடுக்கப்பட்டவை, மாந்தர்கட்கு நேர்வழி காட்டுவதற்காக ஆண்டனால் அருளப்பட்டவை.

நபிமார்கள்: மனித சமுதாய நேர்வழிக்காக மனித சமுதாயத்திலேயே உண்டாக்கப்பட்டு ஆண்டவனால் நபியாக அனுப்பப்பட்

டவர்கள். இவர்கள் பாவம் செய்யமாட்டார்கள். அல்லாஹ்வின் வரம் பைமீருதவர்கள், எப்பவும் ஆண்டவனின் உபதேசங்களை மக்களுக்குப் போதிப்பார்கள். அல்லாவின் அன்பையே விரும்புவார்கள், ஆண்டவன் உத்திரவுக்கு மாற்றமாய் எதையும் எவரையும், என்ன! பெற்ற அன்னை பிதாவையுங்கூட வெறுக்கத் தவறமாட்டார்கள்.

நன்மை தீமைகள் அல்லாவின் கற்பனைப் பிரகாரமே நடைபெறும். இறுதித்தீர்ப்பு நாள் உண்டு. இந்நாளில் நன்மை தீமைகளை விசாரணைப் புரியப்படும், உலகம் அழிந்து பிறகு எல்லோரையும் எழுப்பி கேள்வி கேட்கப்படும், நல்லவர்கள் நன்மையடைவர், தீயவர்கள் தீமை யடைவர் என்ற ஆறுவகை சித்தாந்தங்களை ஒவ்வொரு ஆண் பெண்களின் மீது நம்புவது கடமை. இதுதான் நம்பிக்கைப்பிரமாண சாசனம்.

ஹிருதயத்திற்குரிய இன்னும் சில லக்ஷண கடமைகளும் உண்டு. தாழ்மை, சாந்தம், யாவர்பாலும் நல்லெண்ணம், எவருடனும் அன்பு விசுவாசம், பக்தி, தெய்வபயம், நற்குணம் யாவும் ஹிருதயத்திற்குரிய கடமைகளாகும்.

அங்கங்கள் செய்ய வேண்டிய கடமைகள் :—ஐந்து காலம் தொழுதல், ரமலான் மாதம் நோன்பு நோற்றல், ஹஜ்ஜு ஜகாத் செய்தல், ஏழைகளை ஆதரித்தல், அனாதைகளுக்குதவல், எதிரியை மன்னித்தல் பாபஞ் செய்திருந்தால் மன்னிப்புத் தேடல், போன்றவை அங்கங்களினுல் செய்ய வேண்டிய கடமைகளாகும்.

அங்கங்களினுல் செய்யக்கூடாத செயல்கள் :—தொழுகை விடல், நோன்பு வைக்காமை, ஜகாத் ஹஜ் செய்ய வேண்டியவர்கள் செய்யாமலிருத்தல், அநீதி புரிதல், ஏழைகளை ஆதரிக்காமை, சுற்றத்தாரைப் பகைத்தல், சிநேகிதத்தை முறித்தல், எத்தீம்களை மோசடி புரிதல், அநாவசியமாய் தன்னை அலங்கரித்தல், வீண் விளையாட்டு செய்தல், அநாவசியமாய் பொழுது போக்கல், தெய்வத்தை மறுத்தல், ஆண்டவனின் பக்தியை விடுதல், இஸ்லாத்தின் போதனைகளை அலக்ஷியம் பண்ணுதல், சங்கீதம் நடனமாடுதல்! கூத்து சினிமாக்களை செய்தல், விபச்சாரம் புரிதல், மது வருந்தல், கொலை செய்தல், திருடுதல், சூதாடுதல், ஆண்கள் தங்கம் வெள்ளி, பட்டு இவைகளை அணிதல், அளவு கடந்த ஆடம்பரச் செலவு புரிதல், பெருமை பேசுதல், மார்ச்சரியல் செயல் புரிதல், லஞ்சம் வாங்குதல் அநீத ஆட்சி புரிதல், அநீதத் தீர்ப்புப் பண்ணல், பொய் சாட்சி சொல்லுதல், உண்மை சாட்சியத்தை மறைத்தல், பொய் பேசுதல், மனைவியை அநாவசியமாய் ஹிம்சித்தல், குறி கேட்டல், குறி சொல்லுவதை நம்புதல், பணம் கொடுத்தல், வட்டி வாங்குதல் கொடுத்தல், புரம் பேசுதல், சாபம் செய்யல், பிறரைத் திட்டுதல், வியாபாரத்தில் ஏமாற்றம் பண்ணுதல், சரக்கை விலையேற்றி விடுதல் விலையை வீழ்த்தி விடுதல்களைச் செய்து தான் வாங்காமல் பிறரை

மோசடி செய்தல், மார்கட்டுக்கு வெளியில் ஊருக்கு வெளியில் சாமான்களை வாங்கி தடுத்து கொள்ளை லாபமடித்தல், சரக்குகளை மக்கள் தேவைப்படும்போது பதுக்கி வைத்தல், கொள்ளை லாப மடித்தல் போன்றவைகள் அங்கங்களினால் செய்யப்படும் கூடாத கருமங்களாகும்.

இது போல் சில மதமாற்றத்தை ஏற்படுத்தும் கருமங்களும் உண்டு. அவைகளாவன :—அல்லாவை மறுத்தல், அவனுக்கு இணை வைத்தல், நபிமார்களை கியாமநாளை நன்மை தீமைகளை குர்ஆனை, நபிகள் நாயகத்தின் ஹதீஸ்களை மறுத்தல், போன்றவைகள் இஸ்லாத்தை விட்டு புறம்பாக்கி இவ்வித விரோதிகளை காபிராக்கி விடுகின்றன.

இதே போல் மதச் சின்னங்களையும் சன்மார்க்கம் நமக்குக் காட்டி வலியுறுத்தி யிருக்கிறது. இவ்விதச் சின்னங்களை கண்டிப்பாய் ஒவ்வொரு முஸ்லிம் ஆண் பெண்கள் கவனித்து ஒழுகிவர வேண்டுவது மிக முக்கியம். ராணுவத்தினர்க்கொரு சின்னம், யூதர்களுக்கென ஒரு சின்னம், கிருஸ்தவர்களுக்கென ஒரு சின்னம் ஹிந்துகளுக்கென ஒரு சின்னம் இவ்வாறாய் பல சின்னங்க ளிருப்பது போல் முஸ்லிம்களுக்கென சில சில சின்னங்களை நபிகள் பெருமான் (ஸல்) அவர்கள் வகுத்தும் வலியுறுத்தியும் சென்றுள்ளனர். சுன்னத்துச் செய்தல், தாடி வைத்தல், நகம் அறுத்தல், வேஷ்டியை கரண்டைக்கு மேல் கட்டுதல், மீசை வெட்டுதல், தலைப்பாகை வைத்தல், முட்டிலிருந்து தொப்புள் வரை ஆண்கள் மறைத்தல், பெண்கள் முகம், கை, கணு இரண்டும், கரண்டைக்கால் இரண்டும் நீங்கலாக சகலத்தையும் மறைத்தல், தலைமுடி வைப்பதென்றால் பூராவும் வெட்டாமல் பிடரி வரை அல்லது இரண்டு காதுகளின் மேனை வரை வைத்தல் அல்லது பூரா தலை முடியையும் சிரைத்தல், போன்ற சின்னங்களே நமது சின்னங்களாகும். இவைகளிற் சில பர்ளுகளும் சில சுன்னத்துகளும் சில வாஜிபுகளும், சில முஸ்தஹப்புகளுமாக இருக்கின்றன. இவைகளை யெல்லாம் நமது சன்மார்க்கத் தோழர்கள் கவனிப்பதுமில்லை. இதென்ன இவ்வித இஸ்லாமியச் சின்னங்களைக் கேவலமாயும் மதிக்கின்றனர். மேனாட்டு நாகரிக மென மதி மயங்குகின்றனர். அல்லா ரசூலின் போதனைகளை மறந்து விடுகின்றனர். இன்று மேனாட்டு அறிஞர்களும் தங்கள் நாகரீகம் தப்பு, இஸ்லாமிய நாகரீகமே மேல் என மதிக்கின்றனர். இதை இனியேனும் தெரிந்து இஸ்லாமியச் சின்னங்களாகிய நடை உடையாவற்றையும் பேணி நடப்பார்களாக. இவை தான் எம் இஸ்லாமியச் சட்ட நியதிகள்.

## பொருளாதாரம்.

இன்று ஜனநாயகம், கம்யூனிசம், முதலாளிதத்துவம், சமதர்மம், என்று இரண்டு இரண்டு தத்துவங்கள் ஒன்றுக்கொன்று போரிட்டு முரண்பட்டவைகளாக இருக்கின்றன. முதாளிதத்துவத்தை வளர்த்து முதலாளிகளைப் பெருக்கவைக்கின்றனர் ஒரு சிலர். இம்முதலாளிதத்து

வத்தை வளர்ப்பதில் ஏழை மக்களின் பால் சிந்தனைசெய்வதுமில்லை. பாட்டாளிகள் கஷ்டங்களும் இவர்களுக்குத் தெரிவதில்லை, இது ஒரு சிலரின் போக்கு. ஏழைகளைக் காப்பற்ற வேண்டும், தனி நபர்களுக்கும் சொத்துரிமையில்லை, சொத்துகள் பூராவும் கவர்ண்மெண்டிற்கே உடமை, என்பது இன்னொருசாராரின் வாதம்.

இவ்வாதங்கள் இன்று நேற்றுள்ளவையல்ல. தொன்மைநாள் தொட்டுள்ளவைகளே. இவ்விபரீத வாதங்களை உலகில் எந்தத் தலைவனாலும், மதக் குருக்களாலும், போதகர்களாலும் லீடர்களாலும் தீர்த்து வைக்கமுடியவில்லை. இன்றும் இதற்காக கட்சி பூசல்களை நாம் பார்த்து வருகிறோம். கிஸ்ராகைசர் போன்ற அரசர்களாலும் முடியவில்லை. லெனின், மார்க்கஸ், ரூஸ்வெல்ட், சர்ச்சில் போன்ற தலைவர்களாலும் தீர்க்கமுடியவில்லை. இதென்ன எத்தனை மகாத்மாகளிருந்தனர் அவர்களேனும் இச்சர்சையைத் தீர்த்தனரா? இல்லை.

நாங்கள் சொல்வது:—இச்சர்ச்சையை இஸ்லாம் ஒன்றே தீர்த்து வைத்து மனிதசமுதாயத்தைப் பாதுகாத்தது. முதலாளி முதலாளியாகவே இருக்கலாம் தனி நபர் எவ்வளவு சொத்தையும் வைத்து உரிமை கொண்டாடலாம், ஆனால் பணக்காரர்கள் பல கடமைகளைச் செய்து ஏழைகளைக் காப்பாற்றவேண்டும். ஏழைகளும் பணம் சம்பாதிக்கலாம் என்ற சில விதிகளை விதித்து ஏழைகளை முதலாளிகளை பாகுபாடு இல்லாமல் மனித சமுதாயத்தை இஸ்லாம் பாதுகாத்துள்ளது. இஸ்லாத்தின் போதனைகளின்படி முதலாளி சதா முதலாளியாகவும் ஏழை சதா ஏழையாகவும் வாழமுடியாது. இஸ்லாம் முதலாளியின் பணத்தைப் பங்குபோடும் அனுமதியைத் தரவில்லை, பங்குபோடவேண்டிய நிர்பந்தமுமில்லை.

பதுக்கிவைப்பவன் நரகத்திற்காளாவான். ஏழைகளுக்கு ஜகாத்து கொடுக்காதவன், அவன் பொருளைப் பாம்பாக மாற்றி அவன் கழுத்தில் மாலையாகப் போடப்பட்டிருக்கிறான். அவனை அது தொந்திரவு செய்கிறது. நரகில் அவனை அப்பணத்தை நெருப்பில் காய்ச்சி சூடுபோடப் படுகிறது. இவ்வுலகில் ஒவ்வொருவரும் யாத்ரீகர்கள்போல் வாழ வேண்டும். இவ்வுலக வாழ்வு மிகவும் குறைந்த அந்தஸ்த்தை யுடையது. இவ்வுலகு கொசுவின் இறகிற்கு சமமாயிருந்தால் அல்லாஹ்வின் விரோதிகள் இவ்வுலகைக் கொடுக்கப்படமாட்டார்கள், இவ்வுலகம் ஆகிரத்தில் அதிஷ்ட மில்லாதவர்களின் வீடு. கிஸ்ரா கைஸர் என்ற அரசர்கள் உலகத்திலேயே தம்பங்கைப் பெற்றுக்கொண்டனர். மறு உலகில் அவர்களுக்கொன்று மில்லை. "அனாதைகளை ஆதரிப்பவனும் நானும் இரண்டு விரல்களைப் பார்க்கினும் நெருக்கமாய் சுவர்க்கத்திலிருப்போம். இவ்வுலகை கருணைகாட்டி ஆதரிப்பனுக்கு ஆண்டவன் கருணைகாட்டுகிறான். ஒருவன் செய்யும் தர்மம் ஆண்டவனின் அர்ஷைத்

தொங்கிக்கொண்டு கியாமநாளில் ஆண்டவனிடம் அதைச் செய்த தர்மவானுக்கு ஷிபார்சு செய்கின்றது'' என்பனபோன்ற நபிகள் நாயகத்தின் ஹதீஸ்களையும் குர்ஆனின் போதனைகளையும் ஒவ்வொருவரும் நன்கு கவனிக்கவேண்டும். இப்படி ஒவ்வொருவரும் நடக்க முன்வந்தால் முதலாளிதத்துவமும் சமதர்மமும் சண்டையிடமுடியுமா? வாசகர்கள் கவனிக்கவும்.

ஜீவியம், ஜீவியத்திற்குப்பின், என இரண்டுவகையாய் நம் வாழ்க்கையைப் பிரிக்கலாம். இவ்விரண்டு வாழ்க்கையிலும் பொருளாதாரம் மக்கள் கைகளில் எவ்விதம் மாறவேண்டும் என்பதை இஸ்லாம் போதிக்கின்றது என்பதை சற்று கவனிப்போம்.

ஜீவியத்தில் பணம் சம்பாதிப்பதை இஸ்லாம் கண்மூடித்தனமாய் ஆதரிக்கவில்லை. சம்பாதிப்பதற்குரிய விதிவிலக்குகளை வாசகர்கள்மேற் கூறப்பட்ட சட்ட நியதிகளில் தெரிந்துகொள்ளலாம். பணம் சம்பாதித்தாலும் அதற்குரிய செலவினங்களையும் கவனிக்கவேண்டும். பணக்காரன் தனது ஜீவியத்தில் செய்யவேண்டிய கடமைகள் பலஉள. முதன்மையாய் தன்வாழ்க்கையை, தனது குடும்பவாழ்க்கையை ஆடம்பரம் ஹராமான செலவுகளைவிட்டு சீர்திருத்தி ஒழுங்குபட நடத்தவேண்டும், பிறகு பொதுநலன், கல்விச்சாலை, சன்மார்க்க பிரச்சாரம் பிரச்சாரசபை, பிரச்சாரநூல்நிலையம் சாலை, தங்குமிடம், நோயாளி சிகிச்சைசாலை, கேணி, கிணறு, தண்ணீர் தருமம் யாவையும் செய்வதுடன் இதுபோலவே நண்பர்கள் ஏழைகள், சுற்றத்தார், விருந்தாளிகள் யாவரையும் கவனித்தல் வேண்டும். இவ்விதம் பல கடமைகளுக்கு ஒரு பணக்காரர் கடமைப்படுகிறார். இதில் ஜகாத் என்ற கட்டாய கடமையை நிறைவேற்றுவதில் அவரது பணத்தில் 40-ல் ஒரு பாகம் கணித்துக் கொடுக்கவேண்டும்.

ஜீவியத்திற்குப்பின் ஒரு பணக்காரன் விட்டுவிட்டுச் செல்லும் பொருள்களை வாரிசுகள் பங்கிட்டுக்கொள்ளும் முறைகளை ஈங்கு காட்டினால் நல்லதெனக் கருதுகிறேன். ஒரு பணக்காரனின் மகளை ஒரு அன்னியன் கல்யாணம் புரிந்தால், அல்லது அவனது சகோதரிகளை மணந்தால், அல்லது அவனது தாயை மணந்தால், இப்பணக்காரரின் சொத்தில் மணந்த அந்த அந்நியனும் பங்கு கொள்கிறான். இப்படியானால் அவரின் பணம் ஒருவர்க்கத்திலோ ஒரு நபரிடமோ தேங்க முடியுமா? இந்த வாரிசுகள் மூவகைப்படுவர். ஒன்று அஸ்ஹாபுல்பர்ல் (குர்ஆனிலேயே இவர்களது பங்கை வகுக்கப்பட்டிருக்கும், இவர்கள் அஸ்ஹாபுல் பர்ல் என கூறப்படுவர்) இரண்டு அஸபத் (இவர்களுக்கு குறிப்பிட்ட பங்குகள் கிடையாது. வாரிசுகள் முந்திய கூட்டத்தினர்கள் எடுத்து மீதியுள்ளவற்றை எடுத்துக் கொள்பவர்கள். இவர்களை அஸ்பத் எனப்படும்) மூன்று தவில் அர்ஹாம் (இவர்கள் மேற்கூறப்

பட்ட இரண்டு பார்ட்டிகளும் இல்லாவிடில் வாரிசாக வருபவர்கள். அவர்களிருந்தால் இவர்களுக்குப் பங்கில்லை. இவர்களைத்தான் தவில் அர்ஹாம் எனப்படும்) பொதுமக்கள் நலன்கருதி வாரிசுபாத்யதைகளை இஸ்லாமிய சட்டப்பிரகாரம் விரித்துக் காட்டுதல் நன்மையென கருதுகிறேன். அவைகளைக் கீழே தருகிறேன்.

ஒருவன் இறந்தகால முதன்மையாய் அவனை கபன் தபன் செய்ய வேண்டும். பிறகு அவன் பணத்தில் கடன் இருந்தால் கடனைக்கொடுக்க வேண்டும். பிறகு இறந்தவன் தர்மங்களை வஸிய்யத்து செய்திருந்தால் அவன் சொத்தில் மூன்றிலொரு பங்கை அவன் வஸிய்யத்திற்காக ஒதுக்கிவிட்டு மீதியை வாரிசுகள் பங்கிட்டுக் கொள்ளவேண்டும். குறிப்பிட்ட பங்கையுள்ளவர்கள் 12 பார்ட்டியினர். அவர்களும் அவர்களின் விபரங்களும் வருமாறு:—

1. பெண்மக்கள்:—இவர்கள் தம் இறந்த தகப்பன் தாயின் சொத்தில் பங்கு கொள்கிறார்கள், இவர்கள் ஒருத்தியா யிருந்தால் தகப்பனின் சொத்தில் பாதியை அடைகிறார்கள். ஒன்றுக்குமேற்பட்டவர்களானால் மூன்றில் இரண்டு பங்கைப்பெறுகிறார்கள். இவர்கள் கூடப்பிறந்த (இறந்த தகப்பனின் ஆண்மக்கள்) சகோதரர்களிருந்தால் ஆணிற்கு இரண்டு பங்கும் பெண்களுக்கு ஒன்றும் என்ற முறையில் பங்குகொள்ள வேண்டும்.

2. ஆண் மக்கள் வழிவந்த பேத்திமார்கள்:—பெண் மக்கள் வழி வந்த பேரன் பேத்திகளுக்கு பங்கில்லை. ஆண் வழி வந்த பேத்திமார்களுக்கு இறந்த பாட்டன் பாட்டிகள் சொத்தில் பங்குண்டு. ஒருவளாயிருப்பின் பாதியும் ஒன்றுக்குமேற்பட்டால் மூன்றிலிரண்டும், பாட்டன் பாட்டிகளுக்கு பெண் மக்கள் ஒருத்தி யிருந்தால் இப்பேத்திக்கு ஆறில் ஒன்றும், பெண் மக்கள் பலரிருந்தால் பேத்திமாருக்கு ஒன்றுமில்லை, இப்பேத்திமார்களுடன் கூடப்பிறந்த ஆண் பேரன்மாரிருந்தால் ஆணுக்கிரண்டு பாகம் பெண்ணிற்கு ஒன்றுமாய் பாகித்துக் கொள்ள வேண்டும்.

3. தகப்பன், இவர் தமது பிள்ளைகள் (எவராயினும் சரி) இறந்த காலை பிள்ளையின் சொத்தில் பங்கு கொள்கிறார். இறந்த பிள்ளைக்கு ஆண்மக்கள் ஆண்வழி வந்த பேரன்களிருந்தால் ஆறில் ஒன்றும், பெண் குழந்தைகளிருந்தால் ஆறிலொன்றும் பாகஸ்த்தர்களுக்குப் போக மீதியையும், குழந்தைகளே இல்லாவிடில் மற்ற பாகஸ்த்தர்களுக்குப் போக பூராவையும் பங்கு பெறுவார்.

4. பாட்டன், இவர் இறந்தவரின் தகப்பனைப் பெற்றவர் தாயை பெற்ற பாட்டன் அல்லது குறுக்கிட்டு வரும் பாட்டன் எவருக்கு பேரன் சொத்தில் பங்கில்லை. தகப்பன் வழிவந்த பாட்டன் தனது

பேரன், பேத்தி சொத்தில் பங்கு பெறுகிறார், இறந்த பேரனுக்கு ஆண் பிள்ளை ஆண் வழி வந்த பேரன் யிருந்தால் ஆறில் ஒன்றும் பெண் குழந்தை யிருந்தால் ஆறில் ஒன்றும் மற்ற பாகஸ்த்தர்களுக்குப் போக மீதியையும், பிள்ளைகளே இல்லாமற்போனால் வேறு பாகஸ்த்தர் களுக்குப் போகப் பூராவையும் பங்கு பெறுகிறார். ஆனால் இறந்த பேரனுக்கு தகப்பனிருந்தால் இவருக்குப் பங்கில்லை.

5. தாய் தகப்பன் இரண்டு வழிகளிலும் வந்த சகோதரி:—இவளும் இறந்த தன் சகோதரச் சகோதரிகளின் சொத்தில் பங்குகொள் வாள். இவர்கள் ஒருவளாயிருந்தால் பாதியும், பலபேர்களா யிருந்தால் மூன்றிலிரண்டும் பங்கு கொள்கிறார்கள். இறந்த சகோதர சகோதரி களுக்கு பெண்மக்களிருந்தால் பெண்மக்களுக்குரிய பாகம்போக மீதி யை யடைகின்றனர். ஆனால் இவளுக்கும் இறந்தவளுக்குமான சகோ தரர்களிருந்தால் ஆணிற்கு இரண்டு பெண்ணிற்கு ஒன்றென்ற முறை யில் பங்கு கொள்கிறார்கள். இறந்த சகோதர சகோதரிகளுக்கு ஆண் குழந்தை யிருந்தாலும் ஆண்மக்கள் பெற்ற பேரன்மார்களிருந்தாலும் தகப்பனிருந்தாலும் இவர்களுக்கு பங்கில்லை, பாட்டனிருந்தால் (ஒரு சில இமாம்களின் சொற்படி) பங்கில்லை.

6. தகப்பன் வழிமட்டும் வந்த சகோதரி:—இவர்களும் தம்மாற் றாம் தாய்வழி வந்த சகோதர சகோதரிகள் இறந்தகாலை இவர்கள் சொத்தில் பங்கு பெறுகின்றனர். இவர்கள் ஒருவராயின் பாதியும், ஒன்றுக்கு மேற்பட்டிருந்தால் மூன்றிலிரண்டையும் பெறுகின்றனர். இறந்தமாற்றாம் தாய்வழி வந்த சகோதர சகோதரிகளுக்கு தாய் தகப் பன் வழிவந்த சகோதரி ஒருவரிருந்தால் ஆறில் ஒன்றும் பெறுகிறார் கள். பலபேரிருந்தால் இவர்களுக்கு பங்கில்லை. ஆனால் ஆண் சகோ தரர்கள் இம்மாற்றான் தாய் சகோதரர்களுடன் இருந்தால் ஆணிற் கிரண்டும் பெண்ணிற்கொன்றுமாய் பகிர்ந்து கொள்ளவேண்டும். இறந்த சகோதரிகளுக்கு தாய் தகப்பன் வழி வந்த ஆண் சகோதரனிருந்தா லும், ஆண் மக்களிருந்தாலும், ஆண் வழி வந்த பேரன்மார்களிருந்தா லும் தகப்பனிருந்தாலும் இச்சகோதரிகளுக்கு பங்கில்லை. பாட்டனிருந் தால் (ஒரு சிலரின் சொற்படி) பங்கில்லை.

7. தாய்வழிமட்டும் வந்த சகோதரி சகோதரர்கள்:—இவர்கள் தம் வழிவந்த சகோதர சகோதரிகள் இறந்தகாலை பங்கு பெருகின்றனர். இவர்கள் ஒருவராயிருப்பின் ஆறிலொன்றும் ஒன்றுக்கு மேற்பட்டால் மூன்றிலொன்றும் பெறுகின்றனர், இறந்த சகோதர சகோதரிகளுக்கு பிள்ளைகள் ஆண்வழி வந்த பேரன் பேத்திகள் தகப்பனிருந்தாலும் பாட்டனிருந்தாலும் இவர்களுக்குப் பங்கில்லை.

8. தாய்:—இவள் தன் ஆண் பெண்பிள்ளைகளிறந்தால் பங்கு கொள்கிறாள். இறந்த பிள்ளைகளுக்குப் பிள்ளையிருந்தாலும் ஆண்வழி

வந்த பேரன்மார்களிருந்தாலும் சகோதரன் சகோதரிகள் இரண்டோ இரண்டிற்குமேலோ இருந்தால் (இவர்கள் எந்த வழிவந்த சகோதர சகோதரிகளாயினும்சரி) ஆறில் ஒன்றையும் மேலே கூறப்பட்ட பிள்ளைகள் பேரன்மார்கள், சகோதர சகோதரிகளில்லாவிடில் மூன்றிலொன்றையும், இறந்த மகன் மகளுக்கு மனைவி புருஷனிருந்தால் அவர்களுக்குக் கொடுத்துபோக மீதியில் மூன்றிலொன்றையும் பெறுகின்றனர்.

9. பாட்டி:—இவள் தாயைப் பெற்றவளாயினும் சரி தகப்பனை பெற்றவளாயினுஞ்சரி இறந்த பேரன் பேத்திகளிடத்து பாகம் பெறுகின்றனர். தம் பேரன் பேத்திகளிடத்து ஆறிலொன்றைப் பெறுகின்றனர், இறந்தபேரன் பேத்திகளுக்கு தாயிருந்தால் இவர்களுக்குப் பங்கில்லை.

10. புருஷன்:—இவர் தனது மனைவியிடத்து அவள் இறந்த காலை பங்கு பெறுகிறார். மனைவிக்கு (இவனாலோ வேறு ஒரு புருஷனாலோ யாருக்குப் பிறந்ததாயினும் சரி) பிள்ளை ஆண்வழி இருந்தால் நான்கில் ஒன்றும் இல்லாவிடில் பாதியும் இவர் மனைவியின் சொத்தில் பங்கு கொள்கிறார்.

11. மனைவி:—இவள் தனது புருஷன் இறந்தகாலை பங்கு பெறுகிறாள். புருஷனுக்கு பிள்ளைகளிருந்தாலும் ஆண்வழிப் பிள்ளைகளிருந்தாலும் (அவர்கள் எந்த மனைவியிடத்து பிறந்தாலும்) எட்டில் ஒன்றும் அப்படியில்லாவிடில் நான்கில் ஒன்றும் பெறுகிறாள்.

12. தாய் வழிமட்டும் பிறந்த சகோதரன் விபரம் மேலே சென்று விட்டது.

## அஸ்பாத்

பாகஸ்தர்கள் எடுத்து போக மீதியை எடுப்பவர்கள். இவர்கள் ஆண்வாரிசுகளே யாவர், பெண்வாரிசுகள் வரமுடியாது. இவர்கள் நான்கு வகைப்படுவார்கள். இவர்களில் இறந்தவருக்கு நெருக்கமானவரே பங்கு கொள்வார்; மற்ற தூரக்கிளையாயிருப்பவருக்குப் பங்கில்லை.

(1) இறந்தவரின் பிரிந்த ஆண்மக்கள் ஆண்மக்கள் வழிவந்த பேரன்மார் அவர்களின் ஆண்வழி ஆண்வழியாக பிரிந்தவர்கள், பெண்மக்கள் அவர்கள் பெண்மக்கள் அவர்கள் வழிவந்த பெண்மக்கள் எவருக்கும் அஸ்பாத் உரிமையில்லை.

(2) இறந்தவரை பெற்றவர்கள், தகப்பன் தகப்பனைப்பெற்றவர், அவர் தகப்பன், அவர்தகப்பன், இப்படியே பார்க்கவேண்டும், எவ்வளவு தூரத்தவராயிருப்பினும் சரி.

(3) இறந்தவரின் தகப்பனில் பிறந்தவர் அதாவது சகோதரன் அவர் ஆண்மக்கள் அவர்கள் ஆண்மக்கள் இப்படியே எவ்வளவு தூரஞ் சென்ற கிளையாயினும் சரி.

(4) இறந்தவரின் பாட்டனில் பிறந்தவர் அதாவது சிறியதந்தை பெரிய தந்தை அவர்களின் ஆண்மக்கள் அவர்களின் ஆண்மக்கள் இப்படி எவ்வளவு கீழே போயினுஞ்சரி.

இந்த நால்வகுப்பினரே அஸ்பாத் எனப்படும். இவர்களில் எவருமில்லாவிடில் மூன்ருவதாய் தவில் அர்ஹாம் எனப்படுவோர் வாரிசாய் வருவார்கள்.

இவைகள்தான் இஸ்லாமியப் பொருளாதாரத்திட்டம். இவைகள் மனிதவர்க்கத்தை எப்படி காக்கும் சட்டங்கள் இவைகளைத் தெரியாமல் முஸ்லிம்களாய் பிறந்தும் இஸ்லாத்தின்பால் குற்றமும் சுமத்துகின்றனர். இக்குர்ஆனை விட்டு விட்டு வேறெந்த வார்த்தைகளைதான் இவர்கள் (காபிர்கள்) ஒப்புக்கொள்ளப் போகின்றனர் (அல்ல அல்ல) குர்ஆன் இவைகளே எம்பொருளாதாரசாரம்.

வஸ்ஸலாமு அலாமனித்தப அல்ஹுதா வல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்.

---


## பாவேலாவின் மர்மம்.

இது ஒரு அருமையான துப்பறியும் கதை. இதில் ஒரு பாங்கை மோசம் செய்ய சிலர் எத்தனித்ததையும் அது கைகூடாவண்ணம் செய்து அவர்களின் திருட்டு யோசனைகளை வெளியாக்கிய துப்பறியும் ஷம்ஸின் செயல்களும் விளக்கப்பட்டுள்ளது. இதன் விலை அணா. 8

தேவையுள்ளோர் 9 அணா. ஸ்டாம்பு அனுப்பி வைத்தால் புக்போஸ்ட் மூலம் அனுப்பப்படும்.

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# நஸ்ஹத்துல் ஹதீது,
# வபத்ஹுல் மஜீது.

இவ்வுலகில் இன்ஸானாகப் பிறந்த ஒவ்வொருவரும், சிருஷ்டிக்கர்த்தாவாகிய அல்லாஹுத் தஆலாவை அறிந்து ஹகீகத்தை உணர்ந்து இபாதத்து செய்ய வேண்டியது அத்தியாவசியக் கடமை. இதற்கு இல்மு, ஒழுக்கம், ஈமான் இஸ்லாம், அமல், ஷரீஅத் முதலிய முஆமலாத்துகளைத் தெரிந்து கொள்ள வேண்டியது முதற் பெரும் கடமையாகும்.

இந்த அரிய பெரிய நூலாகிய "நஸ்ஹத்துல் ஹதீது வபத்ஹுல் மஜீது" என்பது நமது நபிகள் நாயகம் ரஹ்மத்துல்லில் ஆலமீன் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவாய் மலர்ந்தருளிய ஹதீதுகளென்னும் திருவாக்கியங்களைக் கொண்டும், ஸஹாபாக்கள், ஒலிமார்கள், ஸாலிஹீன்கள், நாதாக்களுடைய நஸீஹத்துகள், ஹிக்காயத்துகள் முதலிய உபதேச உபமேய ஆகமங்களை ஆதாரமாகக் கொண்டும், தீனுல் இஸ்லாத்தின் எல்லா மஸ்அலாக்களையும், விஷயங்களையும், தத்துவங்களையும் எடுத்தோதும் அற்புதமான நூலாகும். இந்த ஒரு கிதாபு மட்டும் கையில் இருந்துவிட்டால் தமிழ் முஸ்லிம்களுக்கு வேறெந்த கிதாபின் தேவையும் இராது. அதாவது இதில் இல்லாத விஷயமே இல்லையென்று சொல்லலாம். இதன் அருமை நேரில் பார்த்தாலே தெரிய வரும்.

620-பக்கங்கள் கொண்டது: பெரிய ராயல் சைஸ் கிளேஸ் காகிதம், கலிகோ பைண்டு. விலை ரூ. 7—8—0

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்.
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# வேற்றுமை ஒழிய வேண்டும்.

("மாஸ்டர் கமால் பாபு")

"பால் வேண்டுமென்று ஒரு பணக்காரன் காளை மாட்டை பிடித்து வந்தான்" என்ற பழமொழி எந்த விஷயத்திற்காக உபயோகிக்கலா மென்று யோசித்து கொண்டே பஞ்சணையில் புரண்டு கொண்டிருந் தேன். என் மனைவி என்னை வந்து அணைத்துக் கொள்வாள் என்று எதிர் பார்த்திருந்த என்னை நித்ராதேவி வந்து அணைத்துக் கொண் டாள்.

தப்லீகில் ஈடுபட்ட சில தோழர்கள் வெகு அவசரமாக என்னை அழைத்தார்கள். "அவர்களுக்கு என்ன ஆபத்து வந்து விட்டதோ! நான் போய் என்ன செய்வேன். அவர்களுக்கிருக்கும் தைரியத்தில் வீசம் பங்கும் என்னிடம் கிடையாதே! என்ன செய்வது" என்று பயத்தின் பாரத்தை மனத்தலையில் ஏந்திக் கொண்டு அவர்களுடன் புறப்பட்டேன்.

"இன்று லட்சாதிபதிகள் இருவர் தன் மகனுக்கும் மகளுக்கும் சன்மார்க்கத்தின் சுன்னத்து சட்டபடி நிக்காஹ் சாப்பாடு இல்லாமலும் ஆடம்பரம் எதுவுமில்லாமலும் கல்யாணம் செய்கிறார்கள். இவர்களை பின்பற்றி பல ஏழைகளும் சுன்னத்துபடி திருமணம் செய்கிறார்கள். இந்த வைபோகத்தை காண ஏராளமாக ஜனங்கள் வந்துள்ளார்கள். ஆகவே, இந்த திருமண கூட்டத்தில் தாங்கள் கொஞ்ச நேரம் பிரசங் கம் செய்வீர் என்றுதான் அவ்வளவு அவசரமாக கூப்பிட்டோம்" என்று அர்மானலி என்பவர் சொன்னார்.

"பணத்தை மிச்சப்படுத்த வேண்டுமென்ற பண்பாட்டில் சுன் னத்துபடி நிக்காஹ் செய்கிறோமென்று பணக்காரர்கள் பாவனை செய் கிறார்களா?" நான் கேட்டேன்.

"அபசாரம்! அபசாரம்! அவர்கள் ஆடம்பரம் சாப்பாடு இதுகள் செய்தால் எவ்வளவு செலவு ஆகுமோ அதைவிட அதிகமாகவே அவர் கள் செலவு செய்கிறார்கள். இதனால் ஏழைகளுக்கு தான் பிரயோ ஜனமேயின்றி அப்பணக்காரர்களுக் கொன்றும் பிரயோஜன மில்லை. ஏழைகளின் நலத்தை கருதி பஞ்சத்தை போக்கடிக்கத்தான் செல்வந் தர்கள் இவ்விதமான சீர்த்திருத்த கல்யாணம் செய்கிறார்கள்" என்று பெஹ்சானலி என்பவர் சொன்னார்.

"பூனை பால் குடித்தால் புலியின் பசி அடங்கி விட்டதுபோல செல்வந்தர்கள் செய்யும் இச்சிக்கனத்தால் சிறுமையிலுள்ளவர்களின்

சோகம் எப்படி செத்து சாம்பலாகி விடும்?" வியப்புடன் வினவினேன்.

"காலப்போக்கிலே ஏற்பட்ட இங்கிக்காஹ் சாப்பாடு கட்டாய கடமையாக கருதுவதால் அநேக ஏழை குடும்பங்களில் இச்சாப்பாடு செய்ய சக்தி இல்லாத காரணத்தால் பத்து வருஷங்களுக்கு முன் 'புஷ்பவதி' யான பெண்கள் புருஷனில்லாமல் பரதவிப்பதோடு, ஓரிரு பெண்கள் விபசாரத்திற்கும் துணிகிறார்கள். இதற்காகவே பணமுள்ள பெரியவர்கள், தன் பெண்டு பிள்ளைகளுக்கு சுன்னத்துபடி எளிய முறையில் மணம் செய்து வைத்தால் இதை பார்த்து ஏழை ஜனங்களும் சிரமமின்றி சுபகாரியம் நடத்த முடியும். மேலும், சிக்கனத்தை கையாண்ட செல்வந்தர்கள் அந்த பணத்தை மிச்சப் படுத்திவைப்பதில்லை. ஆடம்பரத்துடன் செய்தால் எவ்வளவு செலவு ஆகுமோ அதற்கதிகமாக, சுன்னத்து முறையில் மணம் செய்து கொள்ளும் மணமக்களுக்கு அன்பு காணிக்கையாக நன்கொடை அளிக்கிறார்கள். பிச்சை எடுத்து வரும் பல பெண்களை பள்ளியில் சேர்த்து புஸ்தகவசதிகள் செய்து தந்து, நம்மைபோலவே மார்க்க சட்டங்களை அறிந்து அந்த ஏழைகளும் கவுரவமாக வாழவேண்டுமென்று அதற்காக பணக்காரர்கள் கணக்கில்லாமல் பணத்தை செலவு செய்கிறார்கள். பணக்காரர்களின் இந்த பரிவினால் எத்தனையோ பெண்களின், பாலை வனமாக காட்சி அளித்த வாழ்க்கை இன்று சோலை வனமாக சோபிக்கின்றது. செல்வந்தர்களின் இச்செய்கையால், புருஷனில்லாமல் புண்பட்டிருந்த பெண்கள் மனதில் இன்று பூரிப்பு புரளுகிறது. புல்லரித்திருந்த பெண்களின் இதழ்களில் இன்று புன்சிரிப்பு தவழுகிறது. கல்யாணமாகவில்லையே என்று கவலை கோடுகள் கிழித்திருந்த அக்கன்னிகளின் கன்னத்தில் இன்று குதுகல குழந்தைகள் கூத்தாடுகிறது. சென்ற வருஷம் மிருக தனத்திலிருந்த செல்வந்தர்கள், கருணை மிக்க ஆண்டவன் கிருபையாலும், பேரின்ப நபியின் பொருட்டாலும், அழிவில்லா 'தப்லீக்' ஜமாத்தின் அனுகிரகத்தாலும் இன்று மனித தன்மையை உணர்ந்து உண்மை முஸ்லிமாக ஏழைகளுக்கு இவ்வளவு உதவி புரிகிறார்களென்றால், நம் முஸ்லிம் சமுதாயத்திற்கு இதைவிட அதிக மகிழ்ச்சியை ஊட்டும் செயல் யாதாகிலு முண்டா?" பஞ்சாப் மெயிலை விட அதிக வேகத்தில் சொன்னார் தூபானலி.

"அறுபது அடி வேங்கை புலியை அடக்கி கட்ட அவரக்காய் கொடி கொண்டு போனானும் ஒரு அறிவாளி. இந்த ஸ்திதியில் செய்யும் செல்வந்தர்களின் செய்கையால் நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். செத்து போன ஒரு சுன்னத்தை உயிர்ப்பித்து சமுகத்தின் நலனுக்காக சிறுமைக்கு சாவோலை செதுக்கி பஞ்சத்திற்கு பாடை கட்டிவிட்டார்களென்று. என் மாண்புக்குரிய முஸ்லிம் தோழர்களே!

செல்வந்தர்களின் இச்செய்கையால் சிறுமைக்கு ஜுரம் வரலாம் ஆனுல் செத்து போகாது. பணக்காரர்களின் இப்பரிவினுல் பஞ்சம் பரதவிக் கலாம் ஆனுல் பறந்து போய்விடாது. வாஞ்சை மிக்க சீமான்களின் இவ் வேலையால் வறுமை தேவி அழுகலாம் ஆனுல் அழிந்து விடாது. சீர் அழிந்த சமுதாயத்தை செழிப்புர செய்ய வேண்டுமானுல், வறுமை மரத்தின் ஒரு கிளையை வெட்டினுல் போதாது. அது வளராமல் அதன் ஆணிவேறை அறுக்க வேண்டும். அப்போதுதான் வறுமை விரண்டோடும், சிறுமை செத்து விடும், பஞ்சம் பறந்து விடும், சமுகம் செழித்திருக்கும். இவ்விதமாக ஆகிவிட்டால் மண்ணுலக மனிதர் கள்—இல்லை மேலோக மலாயிக்குகள்—ஏன் ? ஆண்டவனும் அவன் அன்புக்குரிய ரசூலும் அப்பணக்காரனை பாரூட்டாமல் இருக்கமாட் டார்கள். சுபகாரியத்தின் சுன்னத்தை கைபிடித்த செல்வந்தர்கள் இச்சிர்த்திருத்தத்தையும் கடை பிடிக்கவேண்டும்'' நான் சாந்தமுடன் சொன்னேன்.

"அப்படியானுல் அது எப்படி? செல்வந்தர்கள் இன்னும் என்ன செய்தால் சிறுமை அழிந்து ஏழை சமுதாயத்தில் சந்தோஷம் தவ ழும்?'' ஆச்சரியத்தோடு அவசரமாக ஹைறானலி கேட்டார்.

"பள்ளி வந்து விட்டது. இக்கேள்விக்கு பதில் தங்கள் பிரசங் கத்திலே சொல்லுங்கள். எல்லோரும் அறிந்து கொள்ளட்டும்'' என்று மேஹ்ருபானலி என்பவர் சொன்னதால் நானும் சும்மா இருந்து விட்டேன். எல்லோருமாக பள்ளிக்குள் நுழைந்தோம். அங்கு வீற்றி ருப்பவர்களை பார்த்து நான் பிரமித்து விட்டேன். முத்துக்கடல், வைடூரியக்கடல், பவழக்கடல் இவ்விதமாக ஏழு கடல்கள் இருப்பதாக சொல்கிறுர்களே அதுகளில்லாமல் இது எட்டாவது ஜனக்கடலாக இருந்தது. மணமகன்கள் மனதில் மகிழ்ச்சி ஏந்தி பலவர்ண ஆடைகள் அணிந்து வரிசையாக உட்கார்ந்திருப்பதை பார்க்கவே பல கண்கள் வேண்டும். அடாடா, அவர்கள் கட்டிருந்த துப்பட்டாவில்தான் என்ன விநோதம். ஒருவர் பஞ்சாபீ தல்பா! ஒருவர் மதனி தல்பா! ஒருவர் ஈரானி தல்பா! ஒருவர் ஈராகீ தல்பா! ஒருவர் மிஸ்ரீ தல்பா! ஒருவர் பழையமோஸ்தர் பேஷ்இமாம் தல்பா! ஒருவர் பிர்மணேசுற்றியதுபோல் பெயரில்லா தல்பா! இவ்விதமாக ஒவ்வொரு மாப்பிள்ளையும் ஒரு நூதனமாக காட்சி தந்தார்கள். இவைகளைப் பார்க்கும்போது ரயில்வே உதவி மந்திரி திரு ஓ. வி. அழகேசன் சொன்னதுபோல், என் பரவச பாலாற்றில் வெறும் தண்ணீர் ஓடவில்லை பாலும் தேனும் கறை புரண்டோடியது. நான் இதற்குமுன் எந்த பெருநாளிலும் ஏன்? மணமான இரவு வாழ்க்கையில் வரக்கூடிய ஒரே முதல் இரவு அதுதான் என்கிறுர்களே அந்த முதல் இரவிலும் நான் இவ்வளவு சந்தோஷமும் குதூகலமும் அனுபவிக்கவில்லை.

"நேரமாகிறது, பிரசங்கத்தை ஆரம்பியுங்கள்" என்று அர்கானலி சொன்னதும் என்மனதி லிருந்த பரவச பறவைகள் பறந்து பயமென்ற பல்லி குடிபுகுந்து விட்டது. பெரிய பெரிய அறிஞர்கள், கவிஞர்கள், தவிஞர்கள், இளைஞர்களுமுள்ள இக்கூட்டதில் அறிவில்லாத நான் அதுவும் பழக்கமில்லாமல், எப்படி என்ன பிரசங்கம் செய்வதென்று சிந்தனை சக்கரத்தை சுழலவிட்டேன். "யுத்தகளத்திலே போர் தொடுக்க ஒரு வீரனுக்கு வாள் பிடிக்க எவ்வளவு தைரியமும் திறமையும் வேண்டுமோ அதைகாண பன்மடங்கு அதிகமான தைரியமும் திறமையும் பிரசாரம் செய்யும் பிரசங்கிக்கு வேண்டும்" என்று யாரோ ஒரு அறிஞர் எழுதியதை எப்பவோ படித்த எனக்கு அப்போது ஞாபகத்திற்கு வந்தது. அந்த அறிஞர்வாக்கில் எவ்வளவு உண்மை என்று அப்போதுதான் உணர்ந்தேன். "என்ன யோசிக்கிறீர்கள். தங்கள் பிரசங்கத்தைக்கேட்க ஜனங்கள் ஆவலே மனதில் ஏந்தி நிம்பதியற்று இருக்கிறார்கள். சீக்கிரம் ஆரம்பியுங்கள்" என்று ஏதையோ பறிக் கொடுத்தவர்போல் கொஞ்சும் மொழிகளில் கெஞ்சினார் பரேஷானலி. எனவே, என் மனதில் இருந்த பயத்தை ஆண்டவனிடம் அபயம் அளித்துவிட்டு அவனிடமிருந்து சற்று தைரியத்தை வாங்கிக்கொண்டு பிரசங்கத்திற்கென்று போடப்பட்டிருந்த மேடைமீது ஏறினேன்.

சன்மார்க்கத்தின் செல்வ சீலர்களே! நீங்கள் வழக்கத்திற்கு விரோதமாக ஆவணமான அலங்காரங்களை அழித்து சந்தோஷ நிக்காஹ் சாப்பாட்டிற்கு சாவோலை எழுதிவிட்டு சுன்னத்துபடி சீர்திருத்த சுபகாரியங்கள் செய்வதுபாராட்டவும் புகழவும் தக்கதே. சாப்பாட்டிற்கு செலவாகக்கூடிய பணத்திற்கு அதிகமாகவே ஏழைகளுக்கு கொடுத்து உதவி புரிகிறீர்களென்றால் மட்டில்லா மகிழ்ச்சி தரக்கூடியதே. ஆனால் நீங்கள் ஏழைகளுக்கு உதவிபுரியும் இச்சொற்ப செல்வத்தால் சிறுமை சவக்குழியில் சரணடைந்து விடும் என்பது தவறான எண்ணம். வெறும் சாப்பாட்டை நீக்கி வறுமையை விரட்டி விடலாமென்பது விண்டாவாதம். ஏனென்றால் நீங்கள், புரண்ட வெள்ளத்தை பனிக் கட்டியால் அணைகட்ட முயற்சிக்கிறீர்கள். பஞ்சத்தின் பூதத்தை புதைக்க வானத்தில் இடம் தேடுகிறீர்கள். ஆலமரத்தை வெறும் ஆணியால் வீழ்த்த ஆர்வம் கொள்கிறீர்கள். மட்டையினாலே மாடிவீடு கட்ட திட்டமிடுகிறீர்கள். வறுமைவேங்கையை வாயால் விரட்ட நாடுகிறீர்கள். சிறுமை சிற்றரசனை சோறுபோட்டு சாகடிக்கபார்க்கிறீர்கள்.

ஏழைகளின் துயரத்தை போக்க நாட்டம் கொண்ட தனவந்தர்களே! எச்சிலை விழுங்குவதால் வயிறு நிறம்பாது. கனவிலேகண்ட பணம் கைசெலவுக்கு உதவாது. பானையிலுள்ள சாப்பாட்டை பார்ப்ப

தால் பசி அடங்கி விடாது. உங்கள் இனத்தாருடனே நீங்கள், நிக்காஹ் சாப்பாடு மட்டுமல்ல, மஹர், துணி, நகை இதுகள் இல்லாமலும் கல்யாணம் செய்துகொண்டிருந்தால், சமுதாய ஏழைகளின் சோகம் சந்தோஷமாக மாறியும் விடாது. இதனுல் நீங்கள் நினைக்கிறபடி வறுமையும் ஓடிவிடாது. சிறுமை ஒழிந்து சமுதாயத்தில் சந்தோஷம் காணவேண்டுமானுல் சுன்னத்தை கைபிடித்த செல்வந்தர்களாகிய நீங்கள் ஏழை பணக்காரன் என்ற வேற்றுமையை முதலில் ஒழிக்க வேண்டும். நீங்கள் ஏழைகள்மீது இரக்கம் கொள்வது உண்மையானுல் சன்மார்க்க சகோதர சகோதரிகளின் நலத்தை நாடுவது உண்மையானுல் பஞ்சத்தை ஒழிக்க வேண்டுமென்ற உங்கள் எண்ணம் உண்மையானுல், சீர்அழிந்த சமுதாயத்தை செழிப்பாக காணவேண்டுமானுல், சிறுமை சிங்கைத்தை சிறைகொண்டு சந்தோஷ செல்வரசியை விடுதலை செய்யவேண்டுமானுல், தொழுகும்போது ஆண்டவனின் சந்நிதானத்தில் ஏழை பணக்காரனென்ற வேற்றுமையின்றி பிச்சைக்காரருடைய தோளுடன் பணக்காரர்களாகிய உங்கள் தோளை எப்படி இணைத்து நிற்கிறீர்களோ அதேபோல் வாழ்க்கை வீதியிலும் வேற்றுமையின்றி வாஞ்சையுடன் வாழ முற்படவேண்டும்.

உங்களிடம் பெண் இருந்தால் அவளை வறுமையிலுள்ள வாலிபனுக்கு மணம் செய்து தரவேண்டும். உங்களிடம் பிள்ளை இருந்தால் அவனுக்கு சிறுமையிலுள்ள சிங்காரியுடன் மணம் செய்து வைக்க வேண்டும். இதனுல் பரஸ்பர அன்புடன் பணமும் பக்கபலமாக இருந்து பஞ்சத்தைத் ஓட்டக்கூடும். நீங்கள் இப்படி செய்வீர்களானுல் "வறுமையே என் பெருமை" என்று சொன்ன நபிகள் நாயகம் அவர்களின் கடாக்ஷமும் ஆண்டவனின் அருளும் உங்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் உடந்தையாக இருக்குமென்பது உண்மை. என்னுடைய இந்த வார்த்தையால், பாசத்தோடு வளர்த்த உங்கள் பெண்ணை பேர் ஊர் தெரியாத பிச்சைகாரனுக்கு கொடுக்க வேண்டுமென்று சொன்னதாக நினைத்து விடாதீர்கள். 'குலம் அறிந்து பெண்கொடு' என்று பழமொழியுண்டு. ஒவ்வொரு பணக்கார பந்து ஜனங்களிலும் ஏழைகள் இருக்கதான் செய்வார்கள். தன் பந்து ஏழைகளிலே, மகன், மகள், இருந்தால் அவர்களின் நடத்தை குணத்தையும் அறிந்து பிடித்தமானுல், பெண் கொடுப்பதிலும், கொள்வதிலும் கவனம் செலுத்தி காரியத்தை முடிக்கவேண்டும். உங்கள் தெருவிலுள்ள ஏழைகள் உங்களுக்கு தெரிந்த ஏழைகள், உங்களிடம் பழகின ஏழைகள், உங்களிடம் குமாஸ்தாவாக இருந்த ஏழைகள், உங்களுக்கு பிடித்தமானவர்களாக இருந்தால் அவர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். இச்சீர்த்திருத்தத்தை நீங்கள் கையாண்டால் சமுகத்தின் சோலைவனத்தில் சந்தோஷ பறவைகள் உங்களை புகழ்ந்து சங்கீதம் பாடும்; அன்புமிக்க ஆண்டவனின் அருள் அனுதினமும் உங்கள் பேரில் இறங்கும்.

உங்கள் உடலில் ஓடக்கூடிய இரத்தம் தான் ஏழைகள் உடலிலும் ஓடுகிறது. உங்களுக்கு படி அளக்கும் நாயன் தான் ஏழைகளுக்கும் அளக்கிறான். நீங்கள் பிறந்த முஹம்மத் நபி உம்மத்தில் தான் ஏழைகளும் பிறந்திருக்கிறார்கள். இவ்விதமாக ஏழை பணக்காரர்களில் யாதொரு வேற்றுமை இல்லாதபோது, அழியக்கூடிய வெறும் பணத்திற்காக அறிவிலும், ஆற்றலிலும், அன்பிலும், அவாவிலும், ஆதரிக்கும் தன்மையிலும் சிறந்தவர்களாக விளங்கவேண்டிய நீங்கள் 'ஏழை பணக்காரன் என்று வேற்றுமை பிரிப்பது முட்டாள் தனமே அல்லாது முஸ்லிம மனித தன்மை அல்ல. சந்திரன் போலுள்ள சவுந்தரிய சவுபாக்கிய சிங்காரியான ஒரு செல்வந்தர் சஹாபிவுடைய மகளை மணந்து கொள்ளும் படி அவலட்சணமே உருவெடுத்த ஒரு ஆண்டிக்கு அஹமத் நபி ஆக்ஞை விட்டது நீங்கள் அறிந்த விஷயமே. ஆகவே, உங்கள் வீட்டுக்கு ஒரு ஏழை மருமகனோ மருமகளோ வருவது கேவலமாக நீங்கள் கருதுவதானால், முஸ்லிம் சமுதாயத்தின் நலத்தை நாடக்கூடிய மேதாவிகள் என்றும், ஏழைகளுக்கு உதவியும் ஊழியமும் புரியக்கூடிய உத்தமர்கள் என்றும் உங்களை சொல்ல தகுமா? சொல்லிக் கொண்டால் தான் அது உண்மையாகுமா?

நீத நபி உம்மத்தில் பிறந்த நேசர்களே! சங்கையான ஒரு சுன்னத்திற்காக சந்தோஷத்தை உதரி தள்ளிய சர்குண செல்வந்தர்களாகிய நீங்கள் ஏழை பணக்காரன் என்ற விபரீத வேற்றுமையை ஒழிக்க உங்களுக்கு சிரம மாகுமா? சிந்தித்து பாருங்கள். கடலில் விழுந்தவனை கப்பல் ஏற்றிய நீங்கள் கரை சேர்க்க மாட்டீர்களா? சர்வகலா சரித்திர சாஸ்திரங்களை அறிந்த நீங்கள் இந்த வேற்றுமை ஒழிக்காமல் இருக்க மாட்டீர்கள் என்று இன்று ஏழை சமுதாயம் எதிர்பார்க்கிறது. இதுவும் தவிர, மணமகனுக்கு தான் மணமகளை தேட வேண்டுமென்பது நம் மூடபழக்கங்களிலே வளர்ந்த ஒரு வழக்கம். இந்த மூடபழக்கத்தை முறிஅடிக்கவும் பணக்காரர்களாகிய நீங்கள் தான் முன் வரவேண்டும். பணக்காரர்கள் தன் மகனுக்கு ஏழை வீட்டில் பெண் கேட்க முடியும். ஆனால், ஏழை வாலிபனுக்கு பணக்கார வீட்டில் பெண்கேட்க இயற்கையிலே பிறந்த செயற்கையின் அச்சம். எனவே, உங்களிடம் பெண் இருந்தால் உங்களுக்கு பிடித்தமான ஏழை வாலிபனிடம் தன் மகளை மணந்து கொள்ளும்படி நீங்களே சொல்லுங்கள். இதனால் உங்கள் மானம் மறித்து விடாது. அந்தஸ்த்து அழிந்து விடாது. இதற்கு மாறாக அன்பு மேலிடும். அத்துடன் ஆண்டவன் கிருபையும் கொடைபோல் எந்நேரமும் இருக்கும். ஒன்று பட்டால் ஒத்து வாழலாம் என்பதை உணருங்கள். நீங்கள் நினைக்கிறபடி சமூதாயம் செழிப்புர் வேண்டுமானல் முதலில் ஏழை பணக்காரன் என்ற "வேற்றுமை ஒழிய வேண்டும்" இதையே தான் இன்று ஏழை சமுதாயம் செல்வந்தர்களிட மிருந்து எதிர்பார்க்கும் சேவை.

இத்தருணத்தில், "பஜருக்கு பாங்கு சொல்லி விட்டார் எழுந்திருங்கள்" என்று எழுப்பினுள் என் மனைவி பிர்தவுஸுன்னிஸா. இதுவரை நான் பிரசங்கம் செய்ததெல்லாம் கனவில் தான் என்பதை அப்போது உணர்ந்தேன். காலையிலே காணும் கனவு பலிக்கும் என்கிருர்களே பத்ஹுல் இஸ்லாமுக்காக, சன்மார்க்கத்திற்கு தொண்டு புரியும், 'பத்ஹுல் இஸ்லாம்' பத்திரிக்கை மாரலாய் நம்பிரசங்கத்தை பிரபலபடுத்தலாமென்று எழுதி விட்டேன். இதை படித்தபின் நேயர்கள் ஏழை பணக்காரன் என்ற மூட "வேற்றுமை ஒழிய வேண்டும்" என்று வல்ல இறைவனை பிரார்த்திப்பீர்களாக.


## ஹஜ்ரத் காஜா ஜுனைதுல் பக்தாதி

றலியல்லாஹு அன்ஹு அவர்களின்

ஜீவிய சரித்திரம்.

அரும் பெரும் மெஞ்ஞானத் தத்துவங்களான தஸவ்வுப் தக்வா இபாதத்து, உபவாசம் என்ற இற்பானுடைய துறையில் துலங்கி விளங்கும் ஹஜ்றத் காஜா ஜுனைதுல் பக்தாதி றலியல்லாஹு அன்ஹு அவர்களின் அரிய ஜீவிய சரித்திரத்தைப் பார்க்க நம் நேயர்களில் அனைவரும் அளவிறந்த ஊக்கங்கொண்டிருக்கலாம் என்பதை சொல்லத் தேவையில்லை. ஹஸரத் அவர்களின் வஸ்தாதாகிய ஹஜ்ரத் சரீபிஸ்ஸிக்தி றலியல்லாஹு அன்ஹு அவர்களின் அரிய மெஞ்ஞான உபதேசங்களை ஏற்று நடந்தொழுகிய ஹஜ்ரத் காஜாஜுனைத் அவர்கள் உலக மெஞ்ஞானிகளுக்கோர் வழி காட்டிய தீபத்தை போலாவார். தமது திவ்விய உபதேசங்களினுல் அந்தகாரத்தை தவிர்த்து மெஞ்ஞான ஒளி வீசசெய்திருக்கிறுர். தஸவ்வுபின் அபேக்ஷகர்கள் இவ்வரிய நூலை வாங்கி வாசித்து அம்மஹானின் அடிசுவடுகளை பின்பற்றி நடத்தல் அவசியம்.

கிளேஸ் காகிதம் விலை ரூ. 1—4—0

கிடைக்குமிடம் :—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

## மாயமாய்

# மறைந்த மங்கை.

### (தொடர் கதை 7-வது பகுதி)

### 13-வது அத்தியாயம்.

"ஹாரி! அதோ பார். வராண்டாவில் ஒரு மனிதன்!" என்று, ஸன்கோர்ட் டெர்ரஸ் வீடுகளைக் கவனித்துக் கொண்டிருந்த இருவருள் ஒருவன், மற்றவனுக்கு மெதுவாக சொன்னான். ஹாரி என்பவன் மற்றவன் காண்பித்த திக்கைக் கூர்ந்து கவனித்து "ஆம்! என்ன செய்கிறான்? ஷம்ஸைப் போல் தெரிகிறதே! ஆம், ஷம்ஸ் தான்" என்றான். வராண்டாவி லிருந்த மனிதன் இவ்விருவர்களுக்கு ஏதோ சைகை காட்டியதையும் இவர்கள் கவனித்தார்கள். ஷம்ஸ் முன்பு ஒரு முறை சென்றது போல் 6 நெ. வீட்டிலிருந்து 8 நெ. வீட்டிற்கு தாண்டினார். அங்கு ஸூஸியின் படுக்கை அறையினருகே ஜன்னலைக் கவனிக்க அது பூட்டப்பட்டிருந்தது. பக்கத்து அறையும் ஸூஸியைச் சேர்ந்தது. அந்த ஜன்னலும் பூட்டப்பட்டிருந்தது. சில நிமிஷங்களுக்குள் அதை எப்படியோ திறந்து விட்டார்.

"நல்ல வேளை. அதோ வரும் ரோந்து கான்ஸ்டேபிள் ஷம்ஸைப் பார்க்கவில்லை. பார்த்திருந்தால் நாம் போய் அவனிடம் சொல்வதற்குள் கலாட்டா செய்திருப்பான்" என்று ஹாரி, மற்றவனிடம் சொல்லிக் கொண்டிருக்கும் போது, ஷம்ஸ் ஸூஸியின் அறையினுள் நுழைந்து விட்டார். அங்கு முதல் மெத்தையின் பின்புற அறையினுள் விளக்கு எறிவதாக கதவின் இடுக்கினுள் கொஞ்சம் வெளிச்சம் தெரிந்தது. அது பிரபஸரின் அறை. ஷம்ஸ் சப்த மிடாமல் அறையினருகே சென்று காலை மடக்கி முட்டுக்கால் மேல் நின்று கதவில் சாவி போடும் துவாரத்தின் வழியாக அறையினுள் நோக்கினார். அங்கு மூவர் உட்கார்ந்திருந்தனர். ஜான், டொனல்ட், பிரபஸர். பிரபஸரின் முகத்தை நன்றாக கவனித்தார். மிகவும் சாந்தகுண முடையவராக இதுவரை பாசாங்கு செய்து வந்த அந்த முகம் தற்போது திருட்டு முழியும், குள்ள நரியின் தந்திரமுள்ளதாக தெரிந்தது. அது மாத்திரமல்ல, தலையின் இடது புறத்தில் ஒரு பிளாஸ்திரி போடப்பட்டிருந்தது. ஓ! இந்த பிரபஸர் தான் காரில் இருந்தவன்! இவன் தலை மயிர் தான் அங்கு கிடந்தது! அதுவுமல்லாமல் அந்த பிரபஸரின் கால் சட்டையில் எண்ணை கறையும் யிருந்தது. இதைப் பார்த்ததும் அந்த காரின் கதவிலிருந்த எண்ணை ஷம்ஸுக்கு ஞாபகம் வந்தது, பிரபஸர் மற்ற இருவர்களுடனும்

மிகவும் கோபத்துடன் பேசிக் கொண்டிருந்தார். "நான் உங்களுக்கு தலைவனாக யிருந்திரா விட்டால், இதற்குள் நீங்கள் தூக்கு மேடையைக் கண்டிருப்பீர்கள். ஷம்ஸ் போய் விட்டதாக சொல்லுகிறீர்கள். ஆனால் இன்னும் இரண்டு பேர் முன் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர் களும் தொலைந்தால், நமது வேலையை பயமில்லாமல் கவனிக்கலாம். எதற்கும் ஷம்ஸ் உண்மையாகவே போக்ஸ்டோனை விட்டு போய் விட்டாரா? ஜான்! அவர் லண்டனுக்கு போகும் டிரெயினில் ஏறியதைப் பார்த்ததாக சொல்கிறாய். இருந்தாலும் அந்தடிரெயின் பக்கத்து ஸ்டேஷனில் நின்றதும் இறங்கி இங்கு வர முடியாதா? முட்டாளே! நீ ஏன் கூடவே டிரெயினில் போகக் கூடாது? லன்டனுக்கு போய் விட்டாரென்று தீர்க்க தெரிந்தால், கவலை யில்லாமல் யிருக்கலாமே"

"எப்படியும் தற்போது இவ்வீட்டிலோ அடுத்த வீட்டிலோ ஷம்ஸ் கிடையாதென்று நன்றாகத் தெரியும். அதனால் நமது வேலையை கவனிக்கலாமே" என்றான் ஜான்.

"என்ன செய்ய வேண்டும்?"

"ஷம்ஸ் வந்த அன்று நான் உங்களுக்காக வாடகைக்கு சாண்ட் பீச் ரோட்டில் ஒரு வீடு எடுத்தேனே, அங்கு போன் செய்து, சாதிரை யும் பிரேஸரையும் வரச் சொல்லலாம். அவர்கள் இருவரும் ஒருவனை பிடித்து வைத்து காத்துக் கொண்டிருந்தால் எவ்வாறு நமது காரியம் நடைபெறும். அவர்கள் இருவரையும், வரும் போது நமது வீட்டை பார்த்துக் கொண்டிருக்கும் போலீஸ்காரர் இருவரையும் பிடித்து சரி செய்ய சொன்னால் நலம்."

"ஆம். அது தான் சரி. சாதிரும் பிரேசரும் இந்த இருவருக்கும் தலையில் ஒவ்வொரு அடி கொடுத்தால் போதும். சுருண்டு கொள்வார் கள். இருட்டில் எங்காவது தூக்கிப் போட்டு விட்டு வந்தால், நாமெல் லாம் பயப்படாமல் அந்த பெண்ணையும் ரேனிபர்கையும் இங்கிருந்து சாண்ட் பீச் ரோட்டின் புது வீட்டிற்கு கொண்டு போய் விடலாம்" என்றான் டொனல்ட்.

"நாம் ரேனிபர்கையும் அந்த பெண்ணையும் இங்கிருந்து கொண்டு போகும் போது ஷம்ஸ் வந்து முன் நின்றால்......? ஆதலால் நாம் இவ்வாறு செய்வதற்கு முன் ஷம்ஸைப் பற்றி நன்றாக தெரிந்து கொள்ள வேண்டும்" என்று பிரபஸர் சொன்னார்.

"இதற்கு முன் நான் ஷம்ஸுக்கு எதிராக எந்த காரியத்திலும் தலையிடவில்லை. இருந்தாலும் ஷம்ஸைப் பற்றி அதிகமாக கேள்வி பட்டிருக்கிறேன். அவர் தனது அஸிஸ்டென்ட் சோடேவை, ஒரு தகப்பனார் தன் பிள்ளையை பாவிப்பது போல் கவனிப்பாராம். அதனால் சோடே பிழைத்தால் போது மென்று ஓடிப்போ யிருக்கலாம். ஆனால்

இவ்வாறு ஓடுவது, நம்மிடம் தோல்வி யடைந்து ஓடுவதைப் போலாகிறது. ஷம்ஸ் இவ்வாறு தோல்வியுற்று ஓடியதாக நான் கேள்விபட்டதே இல்லை." என்றும் சொன்னர்.

"எப்படியானாலும் ரேனிபர்கையும் பெண்ணையும் இங்கு வைத்திருப்பது எப்பொழுதும் அபாயம். ஆதலால் இப்பொழுது கொண்டு போகாவிட்டால், இனி எப்பொழுது?" என்று டொனல்ட் கேட்டான்.

"ஆம். டொனல்ட் சொல்வது சரி. நாம் கஷ்டப்படுவது ரேனிபர்கின் பாதி சொத்திற்காக. அவன் சொத்து 15 லக்ஷம் பவுண்ட்." என்றான் ஜான்.

"7½ லக்ஷம் பவுண்ட் சும்மாவா. இது கிடைக்க வேண்டும் இல்லாவிடில் தூக்கு மேடை" என்றான் டொனல்ட்.

"அது சரி தான். திடீரென்று ஷம்ஸ் வந்து பாய்ந்தால், நமக்கு தூக்கு மேடையே நிச்சயம்" என்று பிரபஸர் நிதானமாக சொல்லிக்கொண்டே சாராயத்தை இடது கையால் எடுத்து டம்ளரில் ஊற்றி, குடித்தார். பிற்குதான் உட்கார்ந்திருந்த இடத்தை விட்டெழுந்து அந்த அறையிலேயே உலாவினர். இதை கவனித்து ஷம்ஸ் எழுந்து நின்று கொண்டார். அறையை திறந்து யாரும் வந்தால் உடனே இருட்டில் மறைந்து கொள்ள தயாரானர். ஆனல் அறையினுள் பேசுவதையும் தவர விடாமல் கேட்டுக் கொண்டிருந்தார்.

"ஷம்ஸ் நம்மை ஏமாற்றி யிருப்பாரா? அவருக்கு சாண்ட் பீச் ரோட் புதிய வீட்டைப் பற்றி தெரியுமா? ஜான்! அந்த வீட்டிற்கு சாதிர்-பிராசருக்கு எல்லாம் ஒழுங்கா வென்று போன் செய்து பார்." என்றார் பிரபஸர். இதைக் கேட்டதும் ஷம்ஸ் மறுபடியும் சாவி துவாரத்தின் வழியாக அறையினுள் நோக்கினர். அப்பொழுது தான் ஜான் ஒரு பென்ஸிலினல் போன் நம்பரை திருப்பினன். முதல் நம்பர் 7 என்பதை அறிந்தார் ஷம்ஸ். இரண்டாவது நம்பரும் 7. பிறகு "எல்லாம் சரியா" என்று கேட்டான்.

ஷம்ஸ் யோசித்தார். போக்ஸ்டோன் ஒரு சிறிய கிராமமாதலால் அங்கு டெலிபோன் தனியாக யிருக்கவேண்டும். அதில் 77 நி டெலிபோன் எந்த வீட்டில் உண்டென்று கவனித்து, கண்டு பிடித்தால், சோடேவைக் காப்பாற்றலா மென்று தீர்மானித்தார். சோடேவை காப்பாற்றியதும் வெஸ்டர்பியை இடது கையால் குத்தி கொன்ற பிரபஸரின் கைகளில் விலங்கிட வேண்டும். ஒலிவா, ரேனிபர்க்கை கண்டு பிடிக்க வேண்டும். இனி எல்லாம் சீக்கிரம் முடிந்து விடவேண்டு மென்று எண்ணினர். ஆனல் ஒலிவாவையும், ரேனிபர்க்கையும் எங்கு அடைத்து வைத்திருக்கிறார்க ளென்று தெரியவில்லை. இவ்வாறெல்லாம் யோசித்தவாறு ஷம்ஸ் அங்கிருந்து முன் வந்த வழியே, ஸமெஷி

யின் அறை வழியாக வெளிவந்து 6 நெ. வீட்டிற்கு போகாமல் கீழிருந்து மெத்தைக்குப் போடப் பட்டிருந்த ஒரு குழாயைப் பிடித்து வழுக்கியவாறு சப்தமிடாமல் கீழிறங்கினர். அங்கிருந்து நடந்து வெளியே வந்தார். வெளியில் பார்த்துக் கொண்டிருந்த இருவரும் அங்கு வந்துள்ள ரேந்து கான்ஸ்டேபிளுடன் பேசிக் கொண்டிருந் தார்கள். ஷம்ஸ் அவர்களிடம் வந்து, உங்களிடம் யாரிடமாவது டெலி போன் டைரக்டரி யிருக்கிறதா? வென்று கேட்டார்.

"என்னிட மொன்று உண்டு" என்று ஹாரி சொல்லி கொடுத் தான்.

அதை ஷம்ஸ் வாங்கிக் கொண்டு "கொஞ்சமுன் நான் ஓர் சம்பா ஷணையை கேட்கலானேன். அதில் உங்களிருவரையும இரண்டு பேர் வந்து தாக்கக் கூடுமென்று கேட்டேன். ஆதலால் உஷாராக யிருங்கள்" என்று சொல்லியபின், அங்கிருந்து கொஞ்ச தூரம் போய் ஒரு விளக்கி னருகே நின்று, கையிலுள்ள டெலிபோன் டைரக்டரியைத் திறந்து பார்த்தார். 77 நெ. பிளப் ஹவுஸ் என்றும் அது ஒரு ஹோட்ட லென்றும் எழுதி யிருந்தது. கடற்கரை யோரத்திலுள்ள ஒரு வீட்டில் பிளப் ஹவுஸ் என்ற பெயர் பார்த்த ஞாபகம் வந்தது. அந்த வீட் டிற்கு முன் புறமாக போவது உசிதமல்ல வென்றும் நினைத்தார். பின் புறம் கடல். ஆதலால் பின்புறமாக போவதென்ருல், ஒரு படகில் கடலிலிருந்து வருவதுதான் சரியென்றும், தீர்மானித்தார். மோட்டர் போட் ஒன்றும் அதை சப்தமிடாமல் தள்ள துடுப்புகளும் யாரிடமாவது இரவல் வாங்கலாமென்று புறப்பட்டார்.

6 நெ. வீட்டின் கீழ் லூஸி என்பவள் முன் கதவை மூட வந்தவள், கதவை திறந்து தெருவைப் பார்த்தாள். அச்சமயத்தில் ஹாரியிடம் பேசிக் கொண்டிருந்த ரேந்து கான்ஸ்டேபிள் அவர்களை விட்டு நடந்து இவ்வீட்டின் முன் நடந்து வரும்போது லூஸியைப் பார்த்தான். "இதை காலையில் இங்கு அனுப்பலா மென்றிருந்தேன். உன்னைப் பார்த்ததும் ஞாபகம் வந்தது" என்று சொல்லி கான்ஸ் டேபில் காகிதக் கூடு ஒன்றை லூஸியிடம் கொடுத்தான். அதனுள் ஏதோ கனமான சிறிய புஸ்தக மிருப்பதாக தோன்றியது. மேலே எட்மென்ட் பெயர் எழுதப்பட்டிருந்தது.

"அது மோட்டார் சைகிள் ஓட்டுவதற்கு லைஸன்ஸ். லண்டன் அட்ரஸுக்குப் போய் அங்கு எட்மென்ட் இல்லாததால் இந்த அட் றஸுக்கு வந்திருக்கிறது. ஆனல் இது ஒரு டான்ஸ் ஹாலில் கிடந்ததாக என்னிடம் கொடுக்கப்பட்டது" என்ருன்.

"நல்லது, எட்மென்டிடம் கொடுத்து விடுகிறேன்" என்று லூஸி சொல்லி கதவை மூடினுள். மெத்தைக்குப் போய் எட்மென்ட் அறை

18702?

யின் கதவின் கீழ் வைக்கலாமென்று போனுள். சாதாரணமாக எட்மென்ட், சாதிரைப்போல் தூங்கும்போது பலத்த குறட்டை சப்தம் போடுவது வழமை. லூஸி, எட்மென்ட் அறையினருகே வந்ததும், குறட்டை சப்த மில்லாததும் சந்தேக மேற்பட்டது. கதவைத் தட்டினுள். பதிலில்லை. கதவைத் திறந்து உள் சென்று விளக்கை ஏற்றிப் பார்த்தாள். அரையினுள் யாரையும் காணேம். படுக்கையில் யாரும் அன்று தூங்கியதாக தெரியவில்லை. உடனே பக்கத்து வீட்டுக்கு ஓடினுள். பிரபஸர் அறையைத் தட்டினுள். பிரபஸர் கதவைத் திறந்து லூஸி பயந்து கொண்டு நிற்பதைப் பார்த்து "என்ன விஷயம்" என்ருர்.

"ஒரு விஷயம் உங்களிடம் தெரிவிக்கலா மென்று ஓடி வந்தேன். அது சாதாரண விஷயமாகவு மிருக்கலாம். பக்கத்து வீட்டில் தங்கியிருக்கும் எட்மென்ட் அவன் டான்ஸுக்குப் போய் திரும்பி வருவதைப் பார்த்தேன். தற்போது அறையினுள் இல்லை" என்ருள்.

"என்ன? அறையிலில்லையா? வேறு எங்கிருக்கிருன்?"

"எனக்கு தெரியாது. படுக்கையிலும் படுக்கவில்லை போல் தெரிகிறது"

அங்கு உள்ளே உட்கார்ந்திருந்த ஜான் எழுந்திருந்து "டான்ஸிலிருந்து வரும்போது அவன் முகத்தைப் பார்த்தாயா? எட்மென்ட் தான் வந்ததென்று நன்ருகத் தெரியுமா?" துடி துடித்துக் கேட்டான்.

"வழமைப்படி தான் வைத்திருந்த சாவியால் திறந்து உள்ளே வந்து மெத்தைக்குப் போனுன். நேற்று போட்டிருந்த கால் சட்டையும் கோட்டும் போட்டிருந்தான்" என்ருள்.

"முட்டாளே! குருடி! கோட்டையும் கால் சட்டையும் பார்த்தால் போதுமா? அவன் எட்மென்டா யிராது. அது ஷம்ஸ் தான்" என்று கோபமாக பிரபஸர் சொல்லிக் கொண்டே லூஸியை ஒரு புறம் தள்ளினுர். தனது ஜேபியிலிருந்து ஒரு துப்பாக்கி எடுத்துக் கொண்டு "ஷம்ஸ் இங்கிருந்தால், இனியும் தப்பித்து ஓடவிடக்கூடாது. வாருங்கள் தேடலாம்" என்ருர். இரண்டு வீடுகள் பூராவும் தேடினுர்கள், பிரயோஜனமில்லை. தனது அறைக்கு வந்து "இந்த ஷம்ஸ் நம்மை ஏமாற்றி விட்டான். இவனை விடப்போவதில்லை" என்று பிரபஸர் பல்லைக் கடித்துக் கொண்டு சொன்னுர். பிறகு டெலிபோனில் 77 நெ திருப்பினுர்.

"எல்லாம் சரிதானே?"

"ஆம்" சாதிர் பதில் சொன்னுன்.

"இனியும் எல்லாம் ஒழுங்காக இருக்குமென்று எண்ணுதே. சற்கரையை சொல்லியபடி செய்ய எவ்வளவு நேரமாகும்? "

"10 நிமிஷமாகலாம்"

"உடனே சற்கரையை நான் சொல்லிய யிடத்தில் சேர்த்துவிடு. நீயும் பிரேஸரும் சிக்கிரம் அந்த வேலையை முடியுங்கள்"

சாண்ட் பீச் பிளப் ஹவுஸில் சாதிர் டெலிபோனை வைத்துவிட்டு பக்கத்தில் நின்ற பிரேஸரைப் பார்த்து "ஷம்ஸின் அஸிஸ்டெண்டை வேலை முடிக்குமாறு உத்திரவு வந்துவிட்டது. தலைவன் எதற்கோ பயப்படுவதாக தெரிகிறது. எனக்கும் பயமாக யிருக்கிறது. இந்த வேலையை நாம் செய்தால் பழி நம்பேரில்தான் வருமேயல்லாது, தலைவன் பேரில் வராது" என்ருன்.

"என்ன செய்வது! நமக்கு இருபக்கமும் நெருப்பு. இவ்வேலையை செய்துதான் தீரவேண்டும். தலைவன் சொல்படி நடக்காவிட்டால் நமக் கென்ன நேருமென்று தெரியுமே யல்லவா ? " என்ருன் பிரேஸர்.

"நீ சொல்வதும் சரிதான். படகு தயாராயிருக்கிறது. சற்கறை யும் கயிறும் யிருக்கிறது. சிக்கிரம் செய்துவிடலாம்" என்ருன் சாதிர்.

இருவரும் அவ்வீட்டின் பின்னுலுள்ள ஒரு அறைக்கு போனுர்கள். சாதிர் கதவைத்திறந்தான். அந்த அறையிலிருந்த ஒரே ஒரு ஜன்ன லும் துணியால் மூடப்பட்டிருந்தது. சாதிர் ஒரு மெழுகுவத்தி கொழுத்தி அங்கு சுவற்றிலுள்ள ஒரு மாடத்தில் வைத்தான். அங்கு சோடே, கைகால்கள் கட்டப்பட்டு ஒரு மூலையில் கிடந்தான். சோடே வுக்கு தலையில் கொஞ்சம் வலியிருந்ததே தவிர, வேறு யாதொரு காயமு மில்லை. இவர்களைப்பார்த்ததும் தனது முடிவு நெருங்கிவிட்ட தென்று நினைத்தான். கடைசியாக தப்பிக்க ஒரு முயற்சி செய்யவேண்டு மென்று தீர்மானித்தான். சாதிர் ஒரு கைகுட்டையில் ஒரு துர்நாற்ற முள்ள மருந்தை ஊற்றிக்கொண்டிருந்தான். பிரேஸர் சோடேவின் வாயில் கட்டப்பட்டிருந்த கட்டை அவிழ்க்கும்போது, சாதிர் தனது கையிலுள்ள குட்டையுடன் சோடேவின் அருகே குனிந்தான். சோடே கட்டப்பட்டுள்ள தனது கால்களால் தன் முழுபலத்துடன் சாதிர் முகத்தில் திடீரென்று உதைத்தான். சாதிரின் கன்னத்தில் பலமாக திடீரென்று உதை விழவே, பின்பக்கம் தரையில் விழுந்தான். பிறகு பெருமூச்சுவிட்டுக்கொண்டு எழுந்து "கழுதை! உன்னை என்ன செய் கிறேன் பார்! இந்த வேலைசெய்ய மனமில்லாமலிருந்தேன். இனிவிடப் போவதில்லை" என்று சொல்லி சோடேவின் முகத்தில் ஒரு உதை கொடுத்தான். "சர்க்கரை, டீ, காபிக்குதான் உதவுமென்று நினைத் தாயோ. உன்னை படகில் கொண்டுபோய், உன்கட்டுகளை யெல்லாம் அவிழ்த்தபின், உனதுகாலில் ஒரு சற்கரைமூட்டையைக்கட்டி கடலில்

போட்டுவிட்டால், சற்கரை கறைந்தபின், உனது உடம்புமாத்திரம் மிதக்கும். ஏதோ கடலில் தற்செயலாக மூழ்கிவிட்டதாக தெரியும். பார்!" என்றான். இனிதப்பிக்க வேறுவழியில்லை யென்று சோடே எண்ணியிருக்கும்போது சாதிர், சோடேவின் வலாவில் ஒரு உதை உதைத்தான்.

"முட்டாளே! நிற்பாட்டு அவன்பேரில் காயமெதுவும் ஏற்படக் கூடாது. இது தெரியாதா?" என்று பிரேஸர் சப்தமிட்டான்.

"அவன் கொடுத்த உதை உனக்குப்பட்டிருந்தால் தெரியும்" என்றான் சாதிர்.

"அதிருக்கட்டும் நமது வேலையைக் கவனிக்கலாம்" என்று சொல்லிக்கொண்டே பிரேஸர் சோடேவின் வாயிலிருந்த கட்டை அவிழ்த்தான். அவிழ்த்ததும் சப்தமிட முயர்ச்சித்தான் சோடே. அதற்குள் சாதிர் தனது கையிலுள்ள கைகுட்டையை சோடேவின் வாயிலடைத்தான். அவ்வளவுதான் தெரியும் சோடேவுக்கு. ஸ்மரணையற்றான். சோடேவின் கட்டுக்களை யெல்லாம் அவிழ்க்கப்பட்டு, தூக்கி ஒரு படகில் வைக்கப்பட்டது. சாதிர் அங்குள்ள ஒரு சற்கறைமூட்டையுடன் சோடேவின் கால்களைச் சேர்த்து கயிற்றால்கட்டி ஒரு சுருக்கிட்டான். பிரேஸர் படகை ஓட்டினான். கொஞ்சம் நிலா வெளிச்சமும் அன்றிருந்தது. கடலில் வேறுபடகு ஒன்றும் தென்படவில்லை. "போதும் அதிகதூரம் வந்துவிட்டோம். ஒருகைபிடி. இதை தூக்கிப் போடலாம்" என்றான் சாதிர். பிரேஸர் துடுப்புகளை பக்கத்தில் வைத்துவிட்டு சாதிரிடம்வந்தான். தான் செய்யப்போகும் செயலை நினைத்து பயத்தால் கைகள் நடுங்கின. (தொடரும்.)


## வல்லப நாச்சியார்.

இது துப்பறியும் ஓர் இனிய நாவல். படிக்கப்படிக்க மிக ருசிகரத்தையும் ஆனந்தத்தையும் கொடுக்கக் கூடிய அழகிய கதை. இதன் விலை ரூ. 1—9—0

கிடைக்குமிடம் :—

**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்**

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

தமிழில் இதுகாறும் வெளிவராத

## முஸ்லிம் அத்வைத மூலமொழி.

இது அரபி, பார்ஸி, பாஷைகளிலிருந்து நெல்லிக் குப்பம் மௌல்வி முஹம்மது அப்துல் றஹ்மான் ஸாஹிபவர்கள் தமிழில் உரை படுத்தப்பட்ட அருமையான இஸ்லாமிய அத்துவைத நூல்.

இதில் இஸ்லாமிய மூலமந்திரமாகிய "லாஇலாஹ இல் லல்லாஹு" என்னும் கலிமாவின் பொருளை, உள்ளது உள்ள படி விளக்கிக் காட்டி அல்லாஹு தஆலா சர்வமும் தானு யிருக்கிறுன் என்ற சத்தியத்தை நிலைநாட்டி, அதற்கு ஆதார மாக ஆயத்துகளும் ஹதீதுகளுமாகிய சுருதிப் பிரமாணங்களை யும் எடுத்துத் தீட்டி யிருக்கிறுர். அத்துவைதமே தெரியாத சாமானிய படிப்பாளிகள் கூட இதை வாசிக்கத் தொடங்கினுல் இதன் உண்மைதானென்ன வென்று தெரிந்து கொள்வர்.

இந்நூலுடன் "துஹ்பத்துல் முர்ஸலா" என்கிற ஓர் அரிய அத்வைத நூலும் "இந்து மத வேதாந்தப் பகுதி" என்ற ஓர் நூலும் ஆக மூன்றும் சேர்த்து ஒரே பைண்டு செய்யப் பட்டிருக்கிறது. விலை ரூ. 1—12—0

## டர்க்கி பால்கன் யுத்த சரித்திரம்.

இதில் ஐரோப்பா கண்டத்திலுள்ள புராதன இராஜ்ஜிய மாகிய டர்க்கிக்கும், பால்கன், ஸர்வியா, மாண்டி நீக்ரோ, யூனுன் (கிரீக்) முதலிய இராஜ்ஜியங்களுக்கும், உலக முதலா வது யுத்தத்திற்கு முன்பு, நடந்துவந்த அற்புதமாகிய சண் டைகளைப் பற்றி மிக விரிவாக எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை ரூ. 2

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# (மதியுற்ற மாந்தர்களே!)

(காரைக்கால் எச். எம். இஸ்மாயீல்.)

மதியுற்ற மாந்தர்களே! வருவீர்—ஏழை
 சிறுவன் சொல்மொழி கேளீர்!
பாழடைந்த ஆழ்கிணறு—இவ்வுலகம்
 அழிந்துவிடும் முற்றும் உண்மை.

அரமென்ற கயிற்றைக்கொண்டே—இறைவன்
 அன்பாயழைக்கின்றான் நம்மை
துணையல்ல இவ்வுலகில் யாரும்—தனியாய்!
 துயில் கொள்ளுவோம் ஒருநாள் நாமே!

இப்புவி உழலும் ஆபாச செயலில்—என்றும்
 புதைந்திடாது நேர்வழி நாட
சர்வமும் மன்னிக்கும் நமது—ஏக
 இன்பசர்குருவும் அவனே!

சொர்க்க மென்னும் இன்னுலகை—காண
 கூவியழைக்கின்றான் இறைவன்
நம்மைபடைத்தோன் நாதன்—இறைவன்
 அழிப்பதும் செழிப்பதும் செய்தவனே!

ஏக இறைவன் மொழிவது கேட்டு—மாய
 தொல்லுலகைவிட்டு கரைசேர
தூயனும் இறைவன் பதமே—அன்பால்
 துதித்தே போற்றுவோம் வருவீர்!

187029

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

# இனாம்! இனாம்!!

## ஹமீதிய்யா முஸ்லிம் காலண்டர் 1954.

இங்கிலீஷ், தமிழ், அரபு ஆக மூன்று தேதிகளும் 3 கலர்களில் அச்சிடப்பட்டு, ஒரு மாதத்திற்கு ஒரு ஷீட்டாக 12 ஷீட்டுகள் அடங்கி யுள்ளது. ஒவ்வொரு ஷீட்டிலும் தொழுகைகளின் நேரங்களாகிய அவ்காதுஸ் ஸலாத்தும் சேர்க்கப்பட்டுள்ளது.

எங்களிட மிருந்து ஒரே நேரத்தில் எங்களது சொந்த பிரசுரங்களுள் ரூபாய் 10க்கு குறைவில்லாமல் சொந்த உபயோகத்திற்கு கிதாபு, புஸ்தகம் தருவிப்பவர்களுக்கு ஷை காலண்டர் ஒன்று (எங்களிடம் காலண்டர் ஸ்டாக் யிருக்கும் வரை) இனாமாகச் சேர்த்து அனுப்பப்படும்.

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# 1954-வது

## வருஷத்தின்

# ஹமீதிய்யா முஸ்லிம் காலண்டர்

### வெளிவந்து விட்டது.

இதில் இங்கிலீஷ், தமிழ், அரபு ஆக மூன்று தேதிகளும் 3 கலர்களில் அச்சிடப்பட்டு, ஒரு மாதத்திற்கு ஒரு ஷீட்டாக 12 ஷீட்டுகள் அடங்கியுள்ளது. ஒவ்வொரு ஷீட்டிலும் தொழுகைகளின் நேரங்களாகிய அவ்காதுஸ்ஸலாத்தும் சேர்க்கப்பட்டுள்ளது. இவை சொற்ப காலண்டர்களே அச்சிட்டுவருவதால் சீக்கிரமாக செலவாகி விடுவது சகஜம். ஆதலால் தங்களுக்கு தேவையுள்ள காலண்டர்களுக்கு உடனே ஆடர் செய்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஒரு காலண்டர் விலை அணா. 10
நூறு காலண்டர் விலை ரூ. 50

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.